பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 22 செவ்வாய்க்கிழமை 07.08.2018 கதிர் 274

இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரினதும் பாவனைக்கு ஒவ்வொரு வாகனங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளன. அதுவே சிலருக்கு எதிர்காலத்தில் நெருக்கடியாக – சிக்கலாக – வரும் போல. அதற்கான கட்டியம்

பக்கம் 03

# வன்முறைகளைத் தடுக்க தவறுகின்றது பொலிஸ்!

## யாழ்.சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் நேற்றுப் பகிரங்கக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 07

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் உரிய - தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறி வருகின்றனர்.

இவ்வாறு நேற்று யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பகிரங்கக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போதே கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

பக்கம் 14

## யாழ். வாள்வெட்டுகள்; 22 பேர் இதுவரை கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்த யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்தச் சம்பவங்களுடன்

பக்கம் 14

## எரிபொருள் பவுசர் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

### 18 வயது மகள் படுகாயம்




யாழ்ப்பாணம்,ஓக.07

யாழ்ப்பாணம் – கோப்பாய் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நகைக் கடை உரிமையாளர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளுடன் எரிபொருள் பவுசர் ஒன்று மோதிக்கொண்டதில் விபத்து நேற்று

பக்கம் 14



## கருணாநிதியின் உடல்நிலை மிகமோசம்!

சென்னை,ஓக.07

கலைஞர் கருணாநிதி உடல் நிலை மிகவும் பின்னடைவு அடுத்து 24 மணி நேரத்துக்குப் பின்னர் தான் தெரியும் எனவும், முக்கிய உறுப்புகள் அனைத்தும் செயலிழந்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவேரி வைத்திய சாலை நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 14

## போதைப்பொருள் விற்பனையை கட்டுப்படுத்த பொலிஸ் ரோந்து

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.07

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள சில்லறைப் போதைப்பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கோரியுள்ளார்.

பொலிஸார் துரிதமாகச் செயற்படுவதன் ஊடாகப் போதைப் பொருள் வர்த்தகத்தைத் தடுக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டது. யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாய கன், யாழ். மாநரக சபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபை

பக்கம் 14

## அராலி அசம்பாவிதங்கள்; புதனன்று சிறப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்று வரும் மக்களைப் பீதிக்குள்ளாக்கும் சம்பங்கள் தொடர்பில் பொலிஸ் மற்றும் பொது மக்களுக்கிடையிலான சிவில் பாதுகாப்புக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அராலி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 14

## நீதிமன்றை அவமதித்த வழக்கிற்காக விக்கிக்கு அழைப்பாணை அனுப்புவதா?

### மேன்முறையீட்டு மன்றின் முடிவு வியாழனன்று

கொழும்பு,ஓக.07

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக டெனீஸ்வரன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை நேற்று கவனத்தில் எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வழக்குத் தொடர்பாக முதலமைச்சருக்கு அழைப்பாணை (summons) அனுப்புவதா அல்லது நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் (notice) கொடுப்பதா என்பது தொடர்பான தனது முடிவை வியாழனன்று வழங்கும் என்று தெரிய வருகிறது.

பக்கம் 14

## ரணிலுடன் எனக்கு ஒப்பந்தம் கிடையாது

### மறுக்கிறார் மஹிந்த



கொழும்பு, ஓக.07

தனக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவ்வாறானதொரு ஒப்பந்தர், பிரதமருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அநுரகுமார

பக்கம் 14

## இயக்கச்சியில் அதிகாலை கோர விபத்து; ஹைஏஸ் வானில் பயணித்த இருவர் சாவு!

### விமான நிலையத்தில் இருந்து யாழ். திரும்பியவேளை பரிதாபம்

யாழ்ப்பாணம்,ஓக.07

பளை, இயக்கச்சிப் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் படுகாயமடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹைஏஸ் வான், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மின்சார சபையின் வாகனத்தின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சுதாகரன் பிரசாந்தினி (வயது -47) என்ற பெண் உயிரிழந்தார் என யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் உறுதிப்படுத்தின. இவர் வெளிநாட்டில்

பக்கம் 14



## புற்றுநோய் வைத்தியசாலை மூடப்படும் அபாய நிலை!

### வடக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை


யாழ்ப்பாணம், ஓக 07

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மூடப்படும் அபாயம் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் மருத்துவர் த.காண்டீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர்

பக்கம் 14

# முகநூல் மூலம் பெண்களிடம் பணம் வசூலிக்கும் நபர்கள்!



வவுனியா உட்பட வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ் பெண்களை இலக்கு வைத்தே அதிகமாக பணம் வசூலிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இனம் தெரியாத நபர் ஒருவர் பெண்களுடன் முகநூல் மூலம் நட்பாகி சட்டிங்கில் ஆரம்பித்து தான் பிரித்தானியாவில் இருக்கிறேன் எனத் தெரிவித்து நெருங்கிய நட்பாக மாறியதும் அந்தப் பெண்ணுக்கு பரிசு பொருள்கள் வாங்கி அவற்றை பொதியாக்கி இலங்கைக்கு அனுப்புகிறேன் எனதெரிவிப்பர். அல்லது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு உதவி செய்வதாக பல லட்ச கணக்கில் பெறுமதியான பொருள்களை சட்டிங் செய்யும் போது காண்பித்து அவற்றை இலங்கைக்கு அனுப்பியுள்ளேன் என ஓர் பொதி நிறுவனத்தின் ரசீதையும் காண்பிப்பர்.

இதன் பின் ஒரு வார காலத்தில் இலங்கை இலக்கம் ஒன்றிலிருந்து அந்தப் பெண்ணுக்கு அழைப்பு ஒன்று வரும் அதில் நபர் ஒருவர் தான் இலங்கை சுங்க திணைக்கள அதிகாரி என்றும் தங்களுக்கு பொதி ஒன்று வந்துள்ளது என்றும் அது பல இலட்சம் பெறுமதி ஆனது. எனவே அதற்குரிய வரி பணமாக இரண்டு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தை குறித்த வங்கி இலக்கத்திற்கு வைப்பிலிடுமாறு தெரிவிக்கின்றனர்.

இதனை நம்பி அந்தப் பெண்கள் பணத்தை வங்கியில் வைப்பிலிடுகிறார்கள். அதன்பின் அந்த முகநூல் மற்றும் தொலைபேசிகள் செயலிழக்கின்றது. இவ்வாறு பல பெண்கள் பாதிப்புக்குள்ளாகிபொலிஸில் முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் இதுவரையிலும் எந்தவிதமானநடவடிக்கையும் பொலிஸ் தரப்பில் எடுக்கப்பட்டுள்ளது என அறியப்படவில்லை.

வவுனியா கோதண்ட நொச்சிகுளம், தரணிக்குளம், குருமன்காடு, உங்கிளாங்குளம் பகுதியில் பாதிக்கப்பட்ட பெண்கள் வவுனியா விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளனர். யாழ் நகர் பகுதியிலும் பல பெண்கள் இந்த மோசடியில் சிக்கிதங்கள் பணத்தை இழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, பெண்களே முகநூலில் அறிமுகமில்லாதவர்களை நட்பாக்கிக் கொள்ளும் போது அவதானமாக இருங்கள் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(சு-100)

# ஐ.நாவின் தடையை மீறி இலங்கைக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்த வடகொரியா!

ஐ.நாவின் தடைகளை மீறி இலங்கைக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்திருப்பதாக வடகொரியா மீது ஐ.நா அறிக்கை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் வடகொரியா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை கண்காணிக்கும் சுதந்திரமான நிபுணர்கள் குழு, 2017 ஒக்ரோபர் தொடக்கம் 2018 மார்ச் வரையான 6 மாத காலப்பகுதிக்கான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே, குறிப்பிட்ட ஆறு மாத காலப்பகுதியில் ஐ.நாவின் தடைகளை மீறி சிறிலங்காவுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்ததாக வடகொரியா மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள், இலங்கை, சீனா, கானா, இந்தியா, மெக்சிக்கோ, தாய்லாந்து, துருக்கி, உருகுவே உள்ளிட்ட நாடுகளுக்கு 10 கோடி டொலருக்கும் அதிகமான ஆடைகளை ஏற்றுமதி செய்து, ஐ.நாவின் தடையை வடகொரியா மீறியுள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

# இரணைமடுவில் உள்ள விமான ஓடுபாதை, உள்நாட்டு விமான தளமாக அபிவிருத்தி!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கிளிநொச்சி – இரணைமடுவில் உள்ள விமான ஓடுபாதை, உள்நாட்டு விமான தளமாக அபிவிருத்தி செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை, யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட வளாகத்தில் உள்ள கட்டடத் தொகுதிகளை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு அபிவிருத்தியின் போது, இரணைமடு விமான ஓடுபாதை, மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி என்பனவற்றில் கவனம் செலுத்தப்படும்.

காங்கேசன்துறையில் விரைவில் கைத்தொழில் வலயம் ஒன்று உருவாக்கப்படும். அதற்கான காணிகள் விரைவில் ஒதுக்கப்படும்.

மன்னார் – வவுனியா – திருகோணமலை வீதியை அபிவிருத்தி செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் தொழில்துறை அபிவிருத்தியின் மீது அரசு கவனம் செலுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல்!

## புறக்கணிக்கும் மீனவர் சம்மேளனப் பிரதிநிதிகள்

முல்லைத்தீவு,ஓக.07

முல்லைத்தீவு மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அமைச்சர் மட்டத்தில் நடைபெறும் சந்திப்பில் மீனவர் சங்க பிரதிநிதிகள் சார்பில் யாரும் கலந்து கொள்ளப் போவதில்லை என முல்லைத்தீவு மீனவர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடை செய்யப்பட்ட மற்றும் அனுமதியற்ற கடற்றொழில்களால் தமது வாழ்வாதாரத் தொழில் முழுமையாக பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.


இதனைத் தொடர்ந்து மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தை முற்றுகையிட்டு தொடர்ந்தும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து கடற்றொழில் மற்றும் நீரியள் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா ஆகியோரின் தலைமையில் நாளை 8ஆம் திகதி அமைச்சில் நடைபெறும் சந்திப்பில் முல்லைத்தீவு மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் சார்பில் 10 பேரை கலந்து கொள்ளுமாறு அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் தாங்கள் யாரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளப் போவதில்லை என முல்லைத்தீவு மீனவர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# ரெலோ அமைப்புக்குள் பிளவு இல்லை; நான் மட்டுமே விலகி இருக்கிறேன்!

## யாழ் நகரில் கணேஷ் வேலாயுதம்



ரெலோவில் இருந்து விலகியுள்ள கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான கணேஷ் வேலாயுதம் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளேன் எனக் கூறியுள்ளார்.

யாழ்.நகரில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 02.08.2018ஆம் திகதி ரெலோ கட்சியில் இருந்து விலகுவதாக கட்சியின் செயலாளர் நாயகம் என்.சிறீகாந்தாவிடம் கடிதம் கொடுத்துள்ளேன். இது டெலோ அமைப்புக்குள் பிளவு எனச் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால் உண்மை அதுவல்ல. நான் மட்டும் விலகி இருக்கிறேன். அதற்கான காரணம் மக்களுடைய அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றுக்கான திட்டங்கள் கட்சிக்குள் இல்லை.

மேலும் கட்சி இந்த விடயங்களில் சுயாதீனமாக செயற்பட இயலாத நிலையில் உள்ளது. இதனாலேயே கட்சியில் இருந்து விலகியுள்ளேன் என்றார்.

புதிய கட்சி ஒன்றை தொடங்குவீர்களா? மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவீர்களா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில்–

ஆம் புதிய கட்சி ஒன்றை தொடங்கும் எண்ணம் உள்ளது. ஆனால் அரசியலை சேவையாகக் கருதும் தரப்புக்களுடன் இணைந்து பொருளாதாரம், கல்வி, போன்ற துறைகளின் மேம்பாட்டுக்க உழைக்கும் தரப்புக்களுடன் இணைந்து புதிய கட்சியை ஆரம்பிக்கும் எண்ணம் உள்ளது.

அதேவேளை மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் விருப்பம் உள்ளது. அதற்கும் கூட அரசியலை சேவையாக கருதுபவர்கள் தங்கள் ஊதியத்தை கூட மக்களுக்கு வழங்க கூடியவர்களைத் தேடுகிறோம். அப்படி அமைந்தால் நிச்சயமாக மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# டிசெம்பருக்குள் எட்கா குறித்த பேச்சுக்களை முடிக்க இணக்கம்!

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு (எட்கா) தொடர்பான பேச்சுக்களை இந்த ஆண்டில் டிசெம்பர் மாதத்துக்குள் முடிக்க இலங்கை அரசு இந்தியாவுடன் இணங்கியுள்ளது.

புதுடில்லியில் உள்ள இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.ரி.ஐ இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஆரோக்கியமான வகையில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

எட்கா உடன்பாடு குறித்த பேச்சுக்களை டிசெம்பருக்குள் முடிக்க இரண்டு நாடுகளும் இலக்கை நிர்ணயித்துள்ளன. என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் அரச வங்கியின் திறப்பு திருட்டு!

கிளிநொச்சியில் அமைந்துள்ள அரச வங்கி ஒன்றின் திறப்பு இனம் தெரியாத நபரால் திருடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 5 மணியளவில், பொலிஸ் நிலையத்திலிருந்து திறப்பை எடுத்துச் செல்லும் போதே திருடப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் சைக்கிளில் வந்த இனம் தெரியாத ஒருவரால் இந்தத் திறப்பு திருடப்பட்டுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி தலைமையக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூறப்படுவதாகவே தோன்றுகின்றது.

தனிப்பட்ட வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்த யாழ் நகர மேயர் இமானுவேல் ஆர்னோல்ட் திரும்பி வந்த சமயம், அவரை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்று அழைத்து வருவதற்கு யாழ் மாநகர மேயரின் உத்தியோகபூர்வ வாகனத்தை அனுப்பி வைக்கத் தவறியமைக்காக மாநகர ஆணையாளரையும் அவரது அதிகாரிகளையும் மாநகர சபை உறுப்பினர்கள் அண்மையில் ஒரு பிடிபிடித்தனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

''அது அவரது தனிப்பட்ட பயணம். தனிப்பட்ட தேவைகளுக்கான போக்குவரத்துக்கு மேயர் பதவி வாகனத்தைப் பயன்படுத்த முடியாது" – என்று அதிகாரிகள் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்போது வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிரதேச சபைத் தலைவர்களின் வாகன உபயோகம் குறித்து சில செய்திகள் கசிகின்றன.

ஒருவர் விபத்தில் சிக்கி கால் நடக்க முடியாமல் கஷ்டப்படுவர். பெரும்பாலும் சக்கர நாற்காலியில்தான் வாசமும் நகர்வும். கால் சீரடைவதற்கான மருத்துவ பயிற்சிக்காக அடிக்கடி காலையில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய கட்டாயம். பிரதேச சபைப் பணிக்குக் காலையில் செல்ல முதல் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டிய இக்கட்டு.

ஆஸ்பத்திரிக்குப் போவதோ தனிப்பட்ட வேலை, பிரதேச சபைக்கு பிரசன்னமாவதோ உத்தியோகபூர்வ கடமை.

முதலாவதற்கு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்த முடியாது. இரண்டாவது – பிரதேச சபைக்கு கடமைக்குப் போவது – உத்தியோகபூர்வ பணி. அதற்கு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்தலாம்.

பார்த்தார் சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர். உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குத் தமது இக்கட்டை விவரித்து ஒரு விண்ணப்பத்தை அனுப்பினார். கடமைக்கு அலுவலகத்து வரமுன்னர் மருத்துவ சிகிச்சைக்காக –பயிற்சிக்காக – தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. அதை முடித்துக் கொண்டுதான் அலுவலகப் பணிக்கு வர முடிகின்றது. அலுவலகத்துக்கு வர முன்னர், வழியில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குத் தனது தனிப்பட்ட சிகிச்சைக்காக சென்றுவிட்டு, அலுவலகத்துக்கு வருவதற்கு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்த அனுமதி தாருங்கள் என்று அந்தக் கடிதத்தில் கோரினார் அந்த பிரதேச சபைத் தலைவர். எழுத்தில் அனுமதிக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டு, ஆஸ்பத்திரிக்கும் போய் வருவதற்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துகின்றார் அந்த நடக்கமுடியாத பிரதேச சபைத் தலைவர்.

அவர் ஒரு தினுசு என்றால் அதே வலிகாமம் பகுதியில் இன்னொரு பிரதேச சபைத் தலைவர் அதற்குத் தலைகீழ் மாறாகச் செயற்படுகின்றார்.

அவரது உத்தியோகபூர்வ வாகனம் அவரது மனைவியை அவர் கற்பிக்கும் பாடசாலையில் கொண்டு போய் இறக்குவது உட்பட எல்லா 'வீட்டு வேலை' களுக்கும் தாராளமாய் பயன்படுத்தப்படுகின்றது.

இது குறித்து பிரதேச சபையின் கூட்டத்தில் எதிரணித் தரப்பினர் கேள்வி மேல் கேட்டனர்.

மேற்படி பிரதேச சபைத் தலைவரின் மனைவி கற்பிக்கும் பாடசாலை அமைந்துள்ள பகுதியில் பிரதேச சபைத் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்தை அன்று காலையில் தாம் கண்டார் என்றார் ஓர் உறுப்பினர்.

"அதில் என்ன ஆச்சரியம்? ஒவ்வொரு நாளும்தான் அந்த வாகனம் அங்கு போய் வருகின்றது." – என்று அநாயசமாகப் பதிலளித்தார் பிரதேச சபைத் தலைவர்.

''பிரதேச சபையின் உத்தியோகபூர்வ வாகனம் இது. இரவில் பிரதேச சபைத் தலைவரின் இல்லத்தில் அது தரித்து நிற்கலாமா?" – என்று மற்றொரு உறுப்பினர் சபைக் கூட்டத்தில் தலைவரிடம் கேள்வி எழுப்பினார்.

"அது பிரதேச சபைத் தலைவரின் பாவனைக்கு என்றே உத்தியோகபூர்வமாக அளிக்கப்பட்டு விட்டது. ஆகவே அது அவரின் தேவைக்கு ஏற்ப – அவரின் விருப்பப்படி பயன்படுத்தப்படலாம்." என்று சபையில் கூறி உறுப்பினர்களின் வாயை அடைத்தார் தலைவர்.

ஏனைய பிரதேச சபை உறுப்பினர்கள் விடவில்லை.

''வாகனம் இரவில் அங்கு தரித்து நிற்கையில் வாகனத்துக்கு ஏதும் நேர்ந்தால் யார் பொறுப்பு? மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் வீட்டிலேயே ஆயுததாரிக் கொள்ளையர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர். அப்படி ஏதேனும் விபரீதம், பிரதேச சபைத் தலைவரின் வீட்டில் இரவில் அவரின் உத்தியோகபூர்வ வாகனம் தரித்திருக்கும்போது அதற்கு நேர்ந்தால் யார் அதற்குப் பொறுப்பு?" – என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

தாமே அதற்கு பொறுப்பு என்று கூறிச் சமாளித்தார் பிரதேச சபைத் தலைவர்.

ஆனால், இப்படி அவர் உத்தியோகபூர்வ வாகனத்தை தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தித் துஷ்பிரயோகம் செய்கின்றார் எனத் தெரிவிக்கும் முறைப்பாடுகள் உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர் போன்றோருக்கு சபை உறுப்பினர்களால் எழுத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிகிறோம். விரைவில் உரிய விசாரணைகள் ஆரம்பமாகும் எனக் கூறப்படுகின்றது.

உத்தியோகபூர்வ வாகனங்களை பிரதேச சபைத் தலைவர்கள் தமது தனிப்பட்ட தேவைகள், குடும்ப வேலைகளுக்குப் பயன்படுத்தவே முடியாது என்கின்றார் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன்.

அப்படியானால், இந்தத் தலைவருக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு.

உள்ளூராட்சி ஆணையாளரின் பார்வை இந்த விடயத்திலும் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

# கூட்டுறவுத் திணைக்களக் காணியை ராணுவம் மீள ஒப்படைக்கவேண்டும்

## மன்னார் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விக்கி வலியுறுத்தல்

மன்னார், ஓக.07

மன்னார் நகரத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள கூட்டுறவுத்திணைக்களத்தின் காணியை இராணுவம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என வடக்கு.மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் இந்தக் கூட்டத்துக்கு இராணுவ அதிகாரி வருகை தராத நிலையில் பொலிஸ் அதிகாரியின் கவனத்துக்குகொண்டுசெல்லப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி, சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டது.

மேலும் அடையாளம் காணப்பட்ட குளங்கள் புனரமைப்பு, மீன்பிடி மணல் தீடைகளுக்கான எல்லைக்கட்டுப்பாடு, வன ஜீவ ராசிகள் திணைக்களத்தினால் காணிகள் எல்லையிடுதல், முள்ளிக்குளம் காணி, உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இந்தியாவில் இருந்து நாடு திரும்பி வீட்டுத் திட்டம் கிடைக்காத அனைத்து மக்களுக்கும் வீட்டுத்திட்டத்தை பெற்றுக்கொடுக்க ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் மான்னார் மாவட்டத்தில் உள்ளக குடிதண்ணீர் வசதியை பெற்றுக்கொள்ளாத கிராம மக்களுக்கும் அந்த வசதிகளை உடன் ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் காணிகளில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லைகள் போடப்பட்டுள்ளமை குறித்தும், அதிகளவான எல்லைகளை அகற்றுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் ஏற்பாட்டில் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாத் பதியுதீன், பிரதி அமைச்சர் கே.கே. மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஆகியோரின் இணைத்தலைமையில் இந்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்தர்ப்பவாதக் கருத்துகளால் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு

## மதத் தலைவர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.07

அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்து களினாலேயே நல்லிணக் கத்துக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மிகவும் உணர்ச்சி பூர்வமான கருத்து களும் இன நல்லிணக்கம் பாதிப்புறுவதற்கு பிரதான காரணமாகும் என அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் தேரர்கள் உட்பட மதத் தலைவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப் பொருளின் கீழ் விசேட மாநாடொன்று நேற்றுக் காலை கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மதத் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மத தலைவர்கள், அமைச்சர்கள், சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பொலிஸ் மா அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு மல்வத்து பீடத்தின் அனுநாயக்க தேரர் நியங்கொட விஜித்த சிறி தேரர் உரையாற்றுகையில்,

அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துகளினாலேயே நல்லிணக்கத்திற்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மிகவும் உணர்ச்சி பூர்வமான கருத்துகளும் இன நல்லிணக்கம் பாதிப்புறுவதற்கு பிரதான காரணமாகும். ஆகவே அரசியல்வாதிகள் இதனை முற்றாக தவிர்த்து நடக்க வேண்டும் – என்றார்.

சுந்தர் ராஜ் குருக்கள் உரையாற்றுகையில்,

முதலாவது கூட்டத்தின்போது நல்லிணக்கத்துக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பல கூறப்பட்டன. இஒந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சாதகமான நிலைமையில் உள்ளது. ஆகவே அடுத்த மாநாட்டின்போது நாம் அனைவரும் நாட்டைக்கட்டியெழுப்பும் விதத்தைக் கலந்துரையாட வேண்டும். நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அடிப்படையை நோக்கும் போது சிறிய விவகாரங்களாவே இருக்கும் – என்றார்.

எம்.எம்.முபாரக் மௌலவி உரையாற்றுகையில்,

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். நாட்டைகட்டியெழுப்பும் பணிகளில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்படுமாயின் தற்போது வாழும் நாமே பொறுப்பு கூறவேண்டும். – என்றார்.(ஐ)

# சகல இனத்தவருக்கும் சட்டம் சமமானதாகும்

## மத சகவாழ்வு மாநாட்டில் சம்பந்தன் வலியுறுத்தல்



சட்டம் அனைத்து இனத்தவர்கள் மீதும் சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஒரு தலைபட்சமாக நடந்து கொண்டால் பெரும்பான்மையானாலும் சிறுபான்மையானாலும் நாட்டின் மீது அதிருப்தியே ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப் பொருளின் கீழ் விசேட மாநாடொன்று நேற்று கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களின் அபிலாஷை–களை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தும்போதே சீரான நாட்டை எம்மால் உருவாக்க முடியும். அதற்காக நாம் முயற்சிகளை செய்யவேண்டும். ஆகவே அனைத்து இனத்தவர்களின் அபிலாஷைகளை மதிக்கும் நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும்.

அத்துடன் இலங்கையைப் போன்று நாம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் சிங்கப்பூர் செயற்பட்டுத் தற்போது சர்வதேச அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் இலங்கையின் நிலைமை தற்போது கவலைகிடமாக மாறியுள்ளது. ஆகவே இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும்.

ஆகவே இலங்கையின் அடையாளத்தை நாம் சர்வதேசம் வரை கொண்டு செல்லவேண்டும். இதன்படி அனைத்து இனத்தவர்களும் ஒற்றுமையாக இலங்கையராக வாழ்ந்தால் இலங்கையை முன்னேற்ற முடியும். இதனூடாகச் சர்வதேச சவால்களை எம்மால் வெற்றிக்கொள்ள முடியும் –என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com

தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk

விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## அருகி வரும் இணக்க நிலை

தமிழர் தாயகத்தில் – குறிப்பாக வடக்கில் – விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளது என்ற பொய்யான, தீங்கான, கெடுநோக்குடைய ஒரு கருத்தியல் தென்னிலங்கையில் திட்டமிட்ட வகையில் விதைக்கப்பட்டு, பிரசாரப்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழர்களைப் 'பயங்கரவாதிகள்' என்றும், 'சமாதான விரோதிகள்' என்றும், 'பிரிவினைப் போக்குடைய வன்முறையாளர்கள்' என்றும் சித்திரித்துக் காட்டும் ஓர் எத்தனம் தென்னிலங்கையில் பேரினவாதச் சிந்தனையாளர்களால் தொடர்ந்தும் திட்டமிடப்பட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டே வருகின்றது.

இலங்கைத் தீவில் கடந்த ஏழு தசாப்தங்களாகப் புரையோடிப் போய்க் கிடக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் – சமாதான முறையில் – சகல தரப்புகளுக்கும் மற்றும் சகல இன மக்களுக்கும் நீதி செய்யக் கூடிய – ஓர் இணக்கமான தீர்வை எட்டுவதற்கான முயற்சியில் தமிழர்களின் தலைமை நேர்மைத் திறனுடன் பங்குபற்றி வருகின்றது.

ஆனால், பொய்களால் உண்மைக்குச் சமாதி கட்டி, அதன் மூலம் இனவாதத்தைத் தூண்டிவிட்டு, அதில் அரசியல் குளிர் காய முயலும் தென்னிலங்கைத் தரப்புகள் தொடர்ந்தும் புலிப் பூச்சாண்டி என்ற கதையை கட்டி வருகின்றன.

அந்த 'கோயபல்ஸ்' பிரசாரக் கருத்தியலுக்கு உரமூட்டி, ஆதாரப்படுத்தி, உறுதிப்படுத்தும் நோக்கில் சில சம்பவங்கள் ஆங்காங்கே கட்டவிழ்கின்றன.

புலிகளின் காலத்து வெடிமருந்துகள், புலிக்கொடிகள், சீருடைகளுடன் சிலர் பொலிஸாரிடம் சிக்குகின்றனர்.

தமிழ்த் தேசத்தில் கட்டவிழும் வன்முறைகள், அராஜகங்களைக் கட்டுப்படுத்த முடியாத மன உளைச்சலால் – ஆற்றாமையால் – விடுதலைப் புலிகள் மீள உருக்கொண்டாலாவது இந்த அராஜகங்கள் அடங்கி, தமிழர் வாழ்வியலில் புலிகள் காலத்தில் கிட்டிய அமைதியான – மேன்மையான – சமூகச் சூழல் மீண்டும் கிட்டாதா என்று தேசிய நல்லாட்சி அரசின் இராஜாங்க அமைச்சரான தமிழ்ப் பெண்மணி ஒருவர் ஆதங்கத்துடன் கூற, அதற்கு எதிராகத் கிளர்ந்தெழுந்த சிங்கள, பௌத்த பேரினவாதம் அவரை அமைச்சர் பதவியிலிருந்து வீட்டுக்கு அனுப்ப வைத்தது.

அதுமட்டுமல்ல, அவர் விடுதலைப் புலிகளை மறைத்து வைத்து வளர இடமளிக்கின்றார் என்பது வரை மோசமான பல குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்படுகின்றன.

இப்படி தமிழர் தரப்பின் மீது புலிப்பூச்சாண்டி காட்டி, ஒரு புறம் அமைதி முயற்சிகளை நிரந்தரமாகச் சீர்குலைத்து நிர்மூலமாக்கவும், மறுபுறம் தான் பறிகொடுத்த ஆட்சி அதிகாரத்தை மீளக் கைப்பற்றிக் கொள்ளவும் பேரினவாத மேலாதிக்கம் புதிய புதிய கதைகளை அவிழ்த்து விடுகின்றது.

மறுபுறத்தில் இத்தகைய சக்திகளை ஓரம் கட்டி, இந்தத் தீவில் அமைதியான – சமாதானமான – சௌஜன்யம் மிக்க – நல்லிணக்கமும் புரிந்துணர்வும் உடைய – சமத்துவ நிலையைக் கட்டி எழுப்புவோம் என்று மக்களுக்கு வாக்குக் கொடுத்து ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தரப்புகளோ அந்த இலக்கில் செயலிழந்து போய் நிற்கின்றன.

தெற்கில் பௌத்த, சிங்களப் பேரினவாதப் பூதம் கிளர்ச்சியுற்று விஸ்வரூபம் அடைந்து வருகின்றமையை கண்டு பதகளித்துப் போயுள்ள இத் தரப்புகள், அதற்கு மற்றாக நீதியின் பக்கம் நின்று செயற்படும் பண்பியல்பை விட்டு விலகி வருகின்றன.

பேரினவாதப் போக்குக்கு தெற்கில் கிட்டி வரும் ஆதரவைக் கண்டு தாமும் அந்த வழியில் சோரம் போக இத் தரப்புகளும் முயன்று வருகின்றமைதான் இந்த நாட்டின் துரதிஷ்டமாகும்.

நல்லிணக்கமும் புரிந்துணர்வும் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற கோஷத்தோடு அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு, இன்று 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை' போன்று சுருங்கி வருகின்றது. ஆட்சித் தரப்பில் இருந்த பல அரசியல் தலைவர்கள் இனவாதத்தைக் கிளப்பி அதில் அரசியல் செய்யும் எதிரணிப் பக்கத்துக்குச் சாய்ந்து வருகின்றார்கள்.

இலங்கைத் தீவில், நல்லிணக்கத்துக்கும், புரிந்துணர்வுக்குமாக இயங்கும் சக்திகள் – கட்சிகள் – எவை என்பதை சர்வதேச சமூகம் நன்கறியும். இவற்றுக்கு மாறான சக்திகள் பல முனைகளில் இருந்தும், பல வழித் தந்திரோபாயங்களைக் கையாண்டும் அமைதிக்கான வாய்ப்பைக் குழப்பி வருகின்றன.

இவற்றை வெற்றிகரமாக முகம்கொடுத்து நல்லாட்சி அரசு தாண்டும் என்ற நம்பிக்கை அருகி வருகின்றது என்பதுதான் நிஜம்.

# கல்வி வேலைத் திட்டத்தில் 1/3 பங்கு தமிழர்களுக்கு ஒதுக்கப்படவேண்டும்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் வலியுறுத்தல்



கொழும்பு, ஓக 07

நாட்டில்கல்விக்கான வேலைத் திட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்

ஹற்றனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே, அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் காணப்படும் 10,142 மொத்த பாடசாலைகளில் மூவாயிரம் பாடசாலைகள் தமிழ்ப் பாடசாலைகளாகும். இதனால் கல்விக்கு வழங்கப்படும் சலுகைகளில் நூற்றுக்கு 30 சதவீதமாவது தமிழுக்கு வழங்கப்படவேண்டுமென்ற விடயத்தில் அக்கறையுடன் செயற்படுகிறேன்.

இந்தவகையில் நான், மத்திய மாகாணக் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் 3021 ஆசிரியர்களுக்கு நியமனங்களை பெற்றுக்கொடுத்துள்ளேன்.

அத்துடன் மலையகத்தில் பல போட்டிகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பாடசாலை கட்டடங்கள் கல்வி அதிகாரிகள் என பல உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இ.தொ.கா. பெரும் சக்தியாக அமைந்திருந்தது.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சி காலத்தில் அவரது செயலாளர் ஊடாக மலையகத்தின் கல்விக்காக பல உரிமைகள் பெறப்பட்டது. – என்றார். (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடுமையான வறட்சிநிலை

## பயிர்ச்செய்கையில் வீழ்ச்சி

கிளிநொச்சி, ஓக 07

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக குறைவான நிலப்பரப்பிலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சியில் பாரிய, நடுத்தர மற்றும் சிறுகுளங்கள் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்களின் கீழ் வருடாந்தம் 59 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் சிறுபோகத்தில் சுமார் பன்னிரெண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இம்முறை ஆயிரத்து 889.5 ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரமே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பயிர்செய்கையை மேற்கொண்ட ஆயிரத்து 36 விவசாயிகளுக்கு, இருபத்தி மூன்று இலட்சத்து ஆறாயிரத்து 993 கிலோ மானிய உரம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் கீழ் 514 விவசாயிகளுக்கும் உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 355 விவசாயிகளுக்கும் இராமநாதபுரம் கமநலசேவை நிலையத்தின் கீழ் 167 விவசாயிகளுக்கும் இந்த உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. – என்றார். (ஐ)

# படகில் வெளிநாடு செல்ல முயன்ற 21 பேர் கடற்படையிடம் சிக்கினர்

கொழும்பு, ஓக 07

இலங்கையிலிருந்து சட்ட விரோத கடற்பயணத்தின் ஊடாக வெளிநாடு செல்ல முற்பட்ட 21 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் கொழும்பிலிருந்து 117 கடல் மைல் தொலைவில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த படகையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தினேஷ் பண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு துறைமுகப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

சம்பவம் தொடர்பாக கடற்படையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்படாது

## ஐ.தே.கவும் கூறுகின்றது

கொழும்பு, ஓக 07

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்புக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்காது. அரசும் இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# ஜனநாயகத்துக்கு விரோதமாக செயற்படுகின்றது நல்லாட்சி

## மஹிந்த அணி மீண்டும் சாடல்

கொழும்பு, ஓக 07

ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளை நல்லாட்சி அரசு முன்னெடுத்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சுமத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் நிறைவில் தமிழ் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ராஜு பாஸ்கரன் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் எவ்வாறு எமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க மறுப்பு தெரிவிக்கின்றார்களோ அதே போன்றதொரு செயற்பாடுதான் கொழும்பு மாநகர சபையிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைச்சர் மனோ கணேசனின் கட்சியும் துணை போகின்றது. அவருடைய கட்சியினர் ஆளும் கட்சிக்கும் ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்றனர். அதேபோன்று எதிர்க்கட்சிக்கும் ஆதரவு வழங்குகின்றனர். – என்றார். (ஐ)

## நாளை

08.08.2018

புதன்கிழமை

நட்சத்திரம் : மிருகசீரிடம் மு.ப 8.35 வரை

திதி : துவாதசி மு.ப 11.43 வரை

சுபநேரம் : 4.34 – 6.04 வரை

இராகுகாலம் : 12.04 – 1.34 வரை

# எதிர்க்கட்சியுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தவுள்ளோம்: ஹக்கீம்

தேர்தலை நடத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் இழுத்தடிப்புக்களுக்கு முடிவு கட்டுவதற்கு பொது எதிரணியுடனும், எதிர்க்கட்சியுடனும் அடுத்த வாரம் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 28 ஆவது பேராளர் மாநாடு நேற்று முன்தினம் கண்டி பொல்கொல்ல மஹிந்த ராஜபக்ஷ மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றுகையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமக்கு விரைவில் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடாத்த விடாமல் மேற்கொள்ளும் சூழ்சிகளை நாம் விரைவில் தகர்த்தெறிவோம்.

புதிய தேர்தல் முறைமை சிறுபான்மையினருக்கு பெரும் பாதிப்பாகும். இந்த தேர்தல் முறைமையைக் காட்டிக் காட்டி தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது இந்த அரசு. இதற்கு அரசிலுள்ள கட்சிகள் சிலவும் எதிர்க் கட்சியிலுள்ள சிலரும் ஆதரவு வழங்கி வருகின்றன என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## 404 வீடுகளை கையளிக்கும் நிகழ்வு




இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளில் 404 வீடுகளை கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிறப்பு அதிதியாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களைத் தவிர, அமைச்சர்களான நவீன் திசாநாயக்க, கயந்த கருணாதிலக உட்பட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.

## சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக மன்னார் மாவட்டம்!




மன்னார் மாவட்டத்தை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக விருத்தி செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை கனேடிய அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளை மன்னாருக்கு அனுப்பி, அங்குள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் குறித்த ஆய்வறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## இராணுவ வைத்தியசாலைக்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ்!




கொழும்பு ஓக.07

கொழும்பிலுள்ள இராணுவ வைத்தியசாலைக்கு ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையின் ஊடாக வழங்கப்படும் சேவைகளின் தரத்தையும், நம்பகத் தன்மையையும் கௌரவிக்கும் விதத்தில் ஐ.எஸ்.ஓ. விருது வழங்கப்பட்டுள்ளது என இராணுவம் அறிவித்துள்ளது.

இலங்கையின் அரச வைத்தியசாலை ஒன்றுக்கு ஐ.எஸ்.ஓ.-9001 தரச் சான்றிதழ் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த வைத்தியசாலையில் ஆயிரத்து 24 கட்டில்களுடன் 21 வார்ட் தொகுதிகள் இயங்குகின்றன.

இதில் 12 பற் சத்திர சிகிச்சைக் கூடங்களும், 9 சத்திர சிகிச்சைக் கூடங்களும், MRI SCANNING வசதிகளும் உள்ளன.

இராணுவ வைத்தியசாலையில் ஹெலிக்கொப்டர்களை தரையிறக்கும் வசதியும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தலைமையில் ஆயுர்வேத மறுமலர்ச்சி வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக.07

இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்தும் ஆயுர்வேத மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் கீழ் மற்றுமொரு செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி மஹரகமநாவின்ன பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் புதிய நான்கு மாடிக் கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திறந்து வைத்தார்.


## ஒரே இடத்திற்கு மாற்றப்படும் கதிர்காமம் கடைகளும், வர்த்தக தொகுதிகளும்!

கதிர்காமம், ஓக.07

கதிர்காமம் புனித பிரதேசத்திலுள்ள கடைகளும், வர்த்தக தொகுதிகளும் ஒரே இடத்திற்கு மாற்றப்பட இருக்கின்றன.

பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

இதற்காக செலவிடப்படும் தொகை 50 கோடி ரூபாவாகும் என்றும்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பூலாக்காடு கிராம சேவகர் பிரிவிலுள்ள நூறு ஏக்கர் தவனைக்கண்டம் என அழைக்கப்படும் வயல்வெளி பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளனர் வாழைச்சேனை பொலிஸார்.

இதன்போது எல்.எம்.ஜீ. – 01. டி.56 வகை துப்பாக்கி 01 என்பன மீட்கப்பட்டுள்ளன என தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் காணி உரிமையாளரான முத்துவேல் சிவலிங்கம் என்பவர் தமது வயலில் வரப்பு கட்டும் பணிகளை மேற்கொண்ட போது மர்மப் பொருள் ஒன்று தெரிவதை அறிந்து வாழைச்சேனை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸார் நேற்றுக்



காலை அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என அறிந்து அவற்றை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 102 ஆவது மாதிரிக் கிராமத்தின் 23 வீடுகள் மக்களிடம் கையளிப்பு!



மன்னார் – நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட 102 ஆவது மாதிரிக் கிராமமான 'லூர்துநகர்' மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

லூர்து நகரில் புதிதாக அமைக்கப்பட்ட 23 வீடுகளே இவ்வாறு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் றிசாட் பதியுதீன், வட மாகாண அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.மோகன்ராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 93 பயனாளிகளுக்கு சுய தொழில் உபகரணங்கள், மற்றும் கடன் திட்டத்துக்காக தலா ஒரு லட்சம் ரூபா கடன் அடிப்படையில் காசோலையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீரவன்சவுக்கு எதிரான வழக்கு: திகதியை அறிவித்தது நீதிமன்றம்!

7 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் மேல் பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பணத்தை தவறான வழியில் சம்பாதித்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரிக்க, கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியை அறிவித்துள்ளது.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்குடன் சம்பந்தப்பட்ட கணினி சாட்சியங்கள் குற்றம் சுமத்தப்பட்ட தரப்பினரால் இதுவரை பரிசோதிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

கணினி சாட்சியங்களை பரிசோதிக்க நேற்று வரை கால அவகாசத்தை வழங்கியிருந்த நீதிபதி, வழக்கு விசாரணைகளை நவம்பர் மாதம் 2 ஆம் திகதி நடத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சராக கடமையாற்றிய வீரவன்ச, சட்ட விரோதமாக 7 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் மேல் சம்பாதித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஆணைக்குழு, அவருக்கு எதிராக இலஞ்ச சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடவத்தையில் நபரொருவர் போதைப்பொருளுடன் கைது

கிரிபத்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தை பகுதியில் போதைப் பொருள் கடத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவரை கிரிபத்கொட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர் என கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஹுணுப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த மொஹட் றிஸ்வான் நலீம் (வயது 31) என்பவர் ஆவர்.

இவரைக் கைதுசெய்தபோது இவரிடமிருந்து 21 போதை மருந்துகளையும் 1 கிராம் 370 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளும் மற்றும் 62 கிராம் 910 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலும் சந்தேக நபரை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(கு)

# தினசரி ராசி பலன் (07.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமைஏகாதசித்திதி பி.இ.5.15 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம்: ரோகினி பகல் 12.44 வரை பின்னர் மிருகசீரிடம். அமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.23 மணி முதல் 4.56 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.35 மணி முதல் 12.05 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத தேய்பிறை ஏகாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- ரோகினி.

**'ஜோதிடமணி' பிரம்மஶ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப நிலையில் பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.வாகன வசதி சிலருக்கு அமையும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்.

**ரிஷபம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் கனிசமான லாபம் கிடைக்கும். தொழிற் பிரிவினர் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் காணலாம்.

**மிதுனம்** தீமையான நாள். பணவரவு குறையும். தொழிற் பிரிவினர் தொழிலில் மிகுந்த அக்கறை செலுத்துவது அவசியம். குடும்ப நிலையில் பெண்களுக்கு கூடுதலான பொறுப்புகள் ஏற்படும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணவரவு திருப்தியைத் தரும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பார்கள். தொழில் வளர்ச்சி நிலையில் காணப்படும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணைவார்கள்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனக் குறைவாக இருக்கக் கூடாது. உயர் அதிகாரியின் வெறுப்புக்கு ஆளாகுவார்கள்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவை முழுமையாகப் பெற்று மகிழ முடியும். வியாபாரம் சிறப்பாக முன்னேற்றமடையும்.

**துலாம்** குழப்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். யாரிடமும் அநாவசியமாக பேச்சு வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. மனம் குழம்பிய படி இருக்கும் உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் பணியில் கவனக் குறைவின்றி அக்கறையுடன் செய்வது அவசியம். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும்.

**தனுசு** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். உறவினர் வழியில் உதவிகள் எதிர்பார்க்கலாம். புத்திர வழியில் மகிழ்ச்சி உண்டாகும்.


**மகரம்** இனிமையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை, விருந்துகளில் கலந்து மகிழ்தல் போன்றவை பெண்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

**கும்பம்** துயரமான நாள். வருமானம் குறையும். செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகும். சகோதர வழியில் தொந்தரவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பணிச் சுமை அதிகரிக்கும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேம்படைவார்கள்.

சந்திராஷ்டம நாள்; **சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# பொலிஸ் உத்தியோகத்தராக அறிமுகமாகி நகைத் திருட்டில் ஈடுபட்ட பெண் கைதானார்

ஏறாவூர், ஒக.07

ஏறாவூர் நகர கடைத் தெருவிலுள்ள நகைக்கடையொன்றுக்கு சென்ற பெண்ணொருவர் தன்னை பெண் பொலிஸ் உத்தியோகத்தராக அறிமுகப்படுத்திக் கொண்டு நகைத் திருட்டில் ஈடுபட்டு தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில், சி.சி.ரி.வி. காணொலிக் கமெராவில் பதிவாகியிருந்த காட்சியை ஆதாரமாகக் கொண்டு துரிதமாகச் செயற்பட்ட ஏறாவூர் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நிரோன் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் அந்தச் சந்தேக நபரான பெண்ணை கடந்த சனிக்கிழமை மாத்தளை நகரில் வைத்து கைது செய்தனர்.

மாத்தளை நாவுல பிரதேசத்தைச் சேர்ந்த அலோசியஸ் மெலின் டேனியல் (வயது 50) என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் மேற்கொண்ட தொடர் விசாரணைகளின் நிமித்தம் தான் ஏறாவூர் நகைக் கடையில் திருடிய நகையை கதுறுவெல நகரில் விற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த விவரத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட பெண்ணுடன் மாத்தளையிலிருந்து கதுறுவெல நகருக்கு விரைந்த பொலிஸார் திருடப்பட்டு விற்கப்பட்ட இந்த நகையைக் கைப்பற்றியதோடு அதனை வாங்கியவரையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான பெண் மேலதிக நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஷ்வி முன்னிலையில் சனிக்கிழமை ஆஜர் செய்யப்பட்டபோது அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றையதினம் சந்தேக நபரை அடையாள அணிவகுப்பிற்குட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பெண் நகைக்கடைக்குள் நுழைந்து தன்னை அறிமுகப்படுத்தியபோது தானும் தனது கணவரும் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகிறோம் எனக்கூறியதோடு தனக்கு நகை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

பெண்ணின் வேண்டுகோளுக்கிணங்க தங்க நகைகள் பார்வைக்கு காட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது நகைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பெண் தான் வங்கியிலிருந்து பணம் பெறவேண்டும் என்பதாகக் கூறி நகைக் கடையை விட்டு வெளியேறியுள்ளார்.

அதன் பின்னர் நகைக் கடை உரிமையாளர் நகைகளைச் சரிபார்த்தபோது ஒரு தங்கச் சங்கிலி காணாமல் போயிருந்தது.

சி.சி.ரி.வி. கமராவைப் பரிசோதித்தபோது தங்க மாலைகளில் ஒன்றை அப்பெண் சாவகாசமாகத் திருடி தனது கைப்பைக்குள் மறைக்கும் காட்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)




நீண்ட நாட்களாக புனரமைப்புக்கள் எதுவும் இன்றி மக்கள் பாவனைக்கு ஒவ்வாத வகையில் மணல் வீதியாகக் காட்சியளித்த இயக்கச்சி விநாயகபுரம் வீதி பலரது வேண்டுகோளை அடுத்து தற்போது கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மாகாண சபையினுடைய 45 லட்சம் ரூபா சமூக வலுவூட்டல் நிதியிலிருந்து (CBG) புனரமைக்கப்பட்டு வரும் இவ் வீதியினுடைய வேலைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேனுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன் போன்றோர் நேரடியாகவே சென்று பார்வையிட்டனர்.

இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன் உறுப்பினர்களான அருட்செல்வி,த.றமேஸ், கி.வீரவாகுதேவர் ஆகியோருடன் கிராம மட்ட அமைப்பினரும் உடனிருந்தனர்..

# 610 பெண் தலைமத்துவ குடும்பங்களும் 311 மாற்றுத்திறனாளிகளும் துணுக்காயில்!

முல்லைத்தீவு – துணுக்காய் பிரதேசத்தில் 610 பெண் தலைமத்துவ குடும்பங்களும் 311 மாற்றுத்திறனாளிகளும் காணப்படுகின்றனர் என பிரதேச செயலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படும் துணுக்காய் பிரதேசத்தில் 32 வரையான கிராமங்களை உள்ளடக்கிய 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 3942 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 3942 குடும்பங்களிலும் 610 வரையான குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாகக் காணப்படுகின்றன.

இந்தக் குடும்பங்களில் அதிகமானோர் அன்றாட வருமானங்கள் இன்றியும், தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையிலும் யுத்தத்தின் போது காணாமல் போன கணவன்மாரை இழந்த நிலையிலுமே அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுகின்றன.

இதேவேளை, யுத்தத்தின் போது அதிகளவில் பாதிக்கப்பட்ட மற்றும் விபத்துக்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட 311 வரையான மாற்றுத்திறனாளிகளும் காணப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது,

(கு)

# அமெரிக்காவின் 'பசிபிக் ஏஞ்சல்' செயற்றிட்டம் 3 மாவட்டங்களில் நேற்றுமுதல் ஆரம்பமானது

ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் பல்தேசிய பங்காளர்களுடன் இணைந்து பசிபிக் ஏஞ்சல் 2018 நடவடிக்கையின் ஓரங்கமாக அநுராதபுரத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் நேற்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மனிதாபிமான உதவி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன.

பசிபிக் ஏஞ்சல் என்பது வருடாந்தம் நடத்தப்படும் கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கையாகும். இது பொது சுகாதாரம், பல் மருத்துவம், கண்பரிசோதனை, குழந்தைகள் மருத்துவம் மற்றும் பொறியியல் ரீதியான உதவிகள் அதேபோல், பல்வேறு துறைசார் நிபுணத்துவ பரிமாற்றங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

ஏறக்குறைய 65 அமெரிக்க இராணுவ உறுப்பினர்கள் இலங்கையின் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்குப் பயிற்சிகளை வழங்குவதுடன், கொழும்பு, அநுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளில் மருத்துவ மற்றும் பொறியியல் துறைசார் உதவிகளை வழங்குவர்.

இந்த நடவடிக்கை முழுவதிலும் இலங்கை விமானப்படையினரும் அமெரிக்கப் படையினரும் இணைந்து உள்ளூர் பாடசாலைகளில் திருத்த வேலைகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை முன்னெடுப்பர். அமெரிக்க மற்றும் இலங்கை விமானப்படை வீரர்கள் சிறந்த மருத்துவ நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளவிருப்பதுடன், உள்ளூர்வாசிகளுக்கு பல்வேறு மருத்துவ சேவைகளையும் வழங்கவுள்ளனர். பங்களாதேஷ், நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுகாதார பராமரிப்பு உதவியாளர்களும் இதில் பங்குகொள்ளவுள்ளனர்.

தற்போது பதினோராவது ஆண்டில் காலடியெடுத்து வைக்கும் பசிபிக் ஏஞ்சல் நடவடிக்கை மனிதாபிமான நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு பிராந்திய இராணுவங்கள் ஒன்றிணைந்து செயற்பட தயாராக இருக்கின்றமையை உறுதிப்படுத்துகிறது. 2007ஆம் ஆண்டு முதல் பசிபிக் ஏஞ்சல் நடவடிக்கையின் ஊடாக பல் மருத்துவம், கண்பரிசோதனை, குழந்தைகள் மருத்துவம் மற்றும் உளவள சிகிச்சை என பல்வேறுபட்ட சுகாதார சேவைகள் தொடக்கம் கட்டுமான பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்கள், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம், மற்றும் துறைசார் அனுபவ பகிர்வுகள் மூலம் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை மேம்படுத்தப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு பசிபிக் ஏஞ்சல் நடவடிக்கை யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள மக்களுக்காக நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்காவின் பதில் தூதுவர் ரொபர்ட் ஹில்டன் கருத்து வெளியிடுகையில்–

இணைந்து பணியாற்றக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் ஊடாகவும் எமது இராணுவங்களுக்கிடையிலான கூட்டாண்மை அதிகரிப்பதுடன், உள்ளூர் சமூகங்களும் நன்மை பெறுகின்றன. விஸ்தீரணமடையும் எமது பாதுகாப்பு கூட்டாண்மையானது இலங்கை வாழ் சாதாரண மக்களின் வாழ்க்கையில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை பசிபிக் ஏஞ்சல் பிரதிபலிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

(க)

## மன்னாரில் விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்கும் அபாயம்!



விமல் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் எவ்வித தடையுமின்றி செயற்படுவதால், மீண்டும் விடுதலைப்புலிகள் அப்பகுதியில் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மன்னாரில் மீண்டும் விடுதலைப்புலிகளின் ஆட்சி இடம்பெறுகிறது என தகவல்கள் வெளியாகின்றன.

மீண்டும் விடுதலைப்புலிகளின் ஆட்சி உருவாகி விட்டது அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கான தீர்வு என்னவெனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்தின் படி செயற்படுகின்றனர் அவர்களை தடுக்க எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை எனவும் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## அபகரித்த நகைகளை கடவுளுக்கு காணிக்கையாகக் கொடுத்த திருடன்!

கொழும்பு ஓக.07

பெருந்தொகை நகைகளை அபகரித்த திருடன், அதனை காப்பாற்றிக் கொள்ள கடவுளுக்கு காணிக்கை கொடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மொரட்டுவ பகுதியில் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் 30 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணம் மற்றும் தங்க நகைகள் சூறையாடப்பட்டன.

திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் கல்கிஸ்ஸ பொலிஸாரினால் 6 மாதங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் அந்த வர்த்தகரின் சாரதியாக பணியாற்றியவர் என தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி வர்த்தகரின் வீட்டில் பாதுகாப்பாக இருந்த 16 லட்சம் மற்றும் 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப் போயிருந்தன.

அத்துடன், வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமரா கட்டமைப்பின் ஒரு பகுதியும் திருடிச் செல்லப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது திருடப்பட்ட நகைகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

திருடப்பட்ட சில நகைகள் மோதரயிலுள்ள ஆலயம் ஒன்றில் காணிக்கையாக செலுத்தப்பட்டுள்ளன. திருடப்பட்ட நகைகளை பாதுகாக்க வேண்டி அவ்வாறு செய்ததாக சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(க)

## கத்தியால் குத்தி பெண் ஒருவர் கொடூரமாக கொலை: முதியவர் கைது!

பதுளை – பசறை, மீரியபெத்த பகுதியில் கத்தியால் குத்தி பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

40 வயதான பெண்ணொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த கொலை தொடர்பில் 65 வயதான முதியவர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பசறை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புறக்கோட்டை கட்டடமொன்றில் தீ

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் மூன்று மாடி கட்டடம் ஒன்றில் நேற்றுக் காலைதீபரவியுள்ளது.

தீயினால் அந்தக் கட்டடத்தின் முதலாம் மாடி முழுமையாக தீக்கிரையாகி யுள்ளதாக கொழும்பு தீயணைப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

3 தீயணைப்பு வாகனங்களைப்பயன்படுத்தி, 13 தீயணைப்பு வீரர்களின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எண்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் 'மாத்ய அருண' வட்டியில்லாத கடன் திட்டம் விரைவில்!

கொழும்பு, ஓக.07

எண்டர்பிரைஸஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாத்ய அருண என்ற ஊடகவியலாளர்களுக்கான கடன் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு இலகுவான முறையில் தமது பணிகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களை இந்தக் கடன் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ஊடகவியலாளர்களுக்குத் தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக, மூன்று லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்படுகிறது. இது வட்டியில்லாத கடன் திட்டமாகும்.

## கோட்டாபயவின் ஊடக பேச்சாளராக மொட்டு உறுப்பினர் நியமனம்!



முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஊடக பேச்சாளராக கொழும்பு மாநகரசபை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் மிலிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020 ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிறுத்துவதாக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எமது நிலத்தை வெளியாளருக்கு கொடுக்க வேண்டாம்; ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் பொகவந்தலாவ மக்கள்

பொகவந்தலாவ பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் கிளங்கன் தோட்டத்திற்கு அருகில் உள்ள சுமார் 30 ஹெக்டேயர் நிலப்பரப்பை வெளியாருக்கு பிரித்துக் கொடுக்கும் நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் நோர்வூட் பிரதான வீதிக்கு அருகில் கிளங்கன் தோட்ட மக்களால் நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளங்கன் தோட்டத்திற்கு அருகில் காணப்படுகின்ற 30 ஹெக்டேயர் நிலப்பரப்பு கிளங்கன் தோட்டத்திற்கு சொந்தமானது அல்ல எனவும், இது காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானது என தெரிவிக்கப்படும் நிலையில் அந்தப் பகுதியில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஹற்றன் சமனலகம பிரதேசவாசிகள் 25 குடும்பங்களுக்கு இப்பகுதியில் வீடமைக்க தலா அரை ஏக்கர் வீதம் பிரிக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சமனலகம பிரதேசவாசிகளுக்கு இந்த விடத்தில் வீடுகள் அமைக்க இடங்களை ஒதுக்கப்படுவதற்கு தமது ஆட்சேபனையை தெரிவிக்காத கிளங்கன் தோட்ட மக்கள் இவர்களை தவிர்த்த வெளியிடவாசிகளுக்கு காசுக்காக இடங்களை பகிர்ந்தளிப்பதை ஆட்சேபிப்பதாக தெரிவித்து இப்போராட்டத்தை நடத்தினர்.

அதேவேளையில் கிளங்கன் தோட்டத்தை ஒட்டியே இந்த காணி காணப்படுவதால் சமனலகம மக்களுக்கும் கிளங்கன் தோட்டத்தில் பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் 120 குடும்பங்களுக்கு இக்காணியை பகிர்ந்து விட்டு எஞ்சியிருப்பதை கிராம சேவகர் பிரிவுக்குட் பட்ட தோட்ட தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பிரித்துக்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அதேசமயத்தில் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டாம் என ஹற்றன் நீதிமன்றத்தால் நோர்வூட் பொலிஸ் நிலையம் நீதிமன்ற உத்தரவு ஒன்றை பெற்றிருந்தது.

வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளாத தொழிலாளர்கள் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ் மற்றும் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் க.குழந்தைவேல் ஆகியோர் வருகை தந்து மக்களின் பிரச்சினையை கேட்டறிந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்விக்காப் போராடும் வறிய மாணவர்களுக்கு கிளிநொச்சியில் கைகொடுக்கும் 'நோவா' அமைப்பு

## வட்டக்கச்சி நிகழ்வில் சிறிதரன் எம்.பி.





கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விக்காகப் போராடும் வறிய மாணவர்களுக்கு கைகொடுக்க முன்வந்துள்ளது புலம் பெயர் அமைப்பான வன்னி வளத்துக்கான புதியசந்தர்ப்பங்கள் எனப்படும் நோவா (NOVA) செய்து வருகிறது மிக முக்கியமான வரலாற்று காலகட்டத்தில் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி வந்த (NOVA) அமைப்பு அண்மையில் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் சைக்கிள் போன்றவற்றை கையளிக்கும் நிகழ்வை நடத்தியிருந்தது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில் வன்னியிலே கல்விக்காக சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு கைகொடுப்பதற்கு கனடா நாட்டினுடைய மொன்றியல் மாநிலத்தினுடைய வன்னி வளத்துக்காக புதிய சந்தர்ப்பங்கள் அமைப்பு எடுத்திருக்கும் இம்முயற்சி மிகவும் பாராட்டுக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். இவ் நோவா அமைப்பு என்பது மொன்றியல் நகரில் வாழ்கின்ற பல்வேறுபட்ட தமிழ்ப் புலம்பெயராளர்களுடைய கூட்டு முயற்சியின் பலனாகவே இது உருவானது. கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைப்பு பல்வேறு பட்ட மனித நேயப் பணிகளை வன்னிப்பகுதிகளில் குறிப்பாக முல்லைத்தீவு மன்னார் வவுனியா கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்களிலே செய்து வந்திருக்கின்றது. இதனூடாக பல்வேறுபட்ட மக்கள் மாணவர்களுடைய தேவைகளும் வாழ்வாதாரங்கள் மற்றும் நோய்த்தாக்கங்களில் இருந்து மீள்வதற்கு உதவிகளை இந்த அமைப்பு செய்து வருகின்றது.

இந்தப்பணிகளுக்கு மூலகர்த்தாவாக இருந்து செய்து வருகின்ற நண்பர் தெய்வேந்திரம் மிக முக்கியானவர். அவருடைய வழிகாட்டுதல் மற்றும் அவருடைய சிந்தனையை அங்கிருக்கின்ற புலம் பெயர் தமிழர்களும் அவரோடு இணைந்தவகையில் எற்களுடைய அருட்தந்தை யூட்அமலதாஸ் அவர்கள் அங்கு மொன்றியல் நகரில் பங்குத்தந்தையாக இருந்த போது இணைந்து உருவாக்கிய அமைப்பே இதுவாகும். இதனூடாக இவ்வாறான கல்விப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பது ஒரு வரலாற்றின் தொடக்கமாகும்.

ஏழை மாணவர்கள் பலர் தமது கல்விக்காலத்திலே பாடசாலைக்கு செல்கின்றபோதும் தங்களுடைய கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். பல்கலைக் கழகம் செல்கின்ற போதும் அவர்களால் கல்வித்தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். சில குடும்பங்கள் கல்வி சார்ந்த தேவைகளுக்காக சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆகவே இவ்வாறான மாணவர்களின் கல்வி நுகர்வை இன்னும் அபிவிருத்தி செய்யும் வகையில் அவர்களின் தேவையை இனங்கண்டு இவவமைப்பு உதவி செய்து வருகின்றது என சிறீதரன் தனது உரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தை யூட் அமலதாஸ், வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.குருகுலராஜா மாணவர்கள், பெற்றோர், அதிபர், ஆசிரியர் எனப்பலரும் கலந்து கொண்டனர்

## குழந்தையின் சிகிச்சைக்கு நிதியுதவி



திருகோணமலை, ஓக.07

இரண்டரை மாத பெண்குழந்தை கெவின்சியாவின் அவசர மருத்துவ சத்திரசிகிச்சைக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஒருதொகை நிதி உதவியை வழங்கி யுள்ளது.

மிக வறிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை கெவின்சியாவின் உயிருக்கு ஆபத்தான கொடிய நோயிலிருந்து அந்த சிறுமியைக் காப்பாற்றுவதற்கு சிறுமியின் பெற்றோர் பலதரப்பினரிடமும் உதவிக் கரம் கோரியிருந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடமும் உதவி கோரியிருந்தனர்.

இதன் பிரகாரம் கட்சியின் திருகோணமலை மாவட்ட நிர்வாகச் செயலாளர் தங்கராசா புஸ்பராசா மற்றும் கட்சியின் தோழர்கள் மேற்கொண்ட முயற்சி காரணமாக அந்தச் சிறுமியின் அவசர சத்திர சிகிச்சைக்குத் தேவையான நிதியின் ஒரு தொகுதி சிறுமியின் பெற்றோரிடம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற நிதி வழங்கல் நிகழ்வில் கட்சியின் திருகோணமலை மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் ஞானப்பிரகாசம் பூலோகராஜன் மக்கள் தொடர்பாளர் அலுவலர் செல்வராஜ் ஆகியோர் பங்குபற்றி இருந்தனர்.



வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் நிதியொதுக்கீட்டில் ஜே/86, ஜே/87 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்ட வேளையில் ... (இ - 19)

**படம்:- எம்.எல்.லாபிர்**





யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நூலகராகப் பணி புரிந்து இளைப்பாறிய எம்.ஏ. மிஸ்னூன் நூலகருக்கு கல்லூரி அதிபர் சேது தாவுது தலைமையில் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், முன்னாள் அதிபர்கள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ - 19)

**படம்:- எம்.எல்.லாபிர்**

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பெரியக்கட்டு கோடி அற்புதரான புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.விக்ரர் சோசை அடிகளார், மூத்தோர் சங்க இயக்குநர் அருட்பணி ஒல்பன் இராஜசிங்கம் அடிகளார் (ஓ.எம்.ஐ), அருட்பணி, மறை மாவட்ட நிதியாளர் அருட்பணி சீ.ஜயபாலன் அடிகளார், முருங்கன் மறைகோட்ட முதல்வர் அருட்பணி லீ.சுரேந்திரன் றெவல் ஆகியோருடன் பல குருக்கள் இணைந்து பெருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றமையையும் திருச்சுரூப பவனியையும் ஆயர் திருச்சுரூப அசீர் வழங்குகின்றமையையும் –

மறைமாவட்டத்தில் நாலா பக்கங் களிலிருந்தும் வந்து கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (இ-112)







"மண்டைதீவு மகிழ்நன்"
- கை.பேரின்பநாயகம் -

# ஹிரோஷிமா, நாகசாகியில்

# அணுகுண்டு பேரழிவால் இன்றும் விவசாயம் செய்ய முடியாத நிலை!!

இரண்டாவது உலக மகா யுத்தம் ஐரோப்பாவிலும் வட ஆபிரிக்காவிலும் 1945 ஆம் ஆண்டு ஓய்வுக்கு வந்திருந்தது. யுத்தத்தில் ஈடுபட்ட வீரர்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

காயப்பட்டவர்களின் நிலை கவலைக்கிடமான நிலை என்ற போதும் அவர்களுக்கும் மாற்று ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருந்தன.

ஜப்பானிய வீரர்களின் பாசறைகள் நெருக்கமாக இருந்த பசுபிக் பிராந்தியத்தில் அவர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

ஆசியாவின் கிழக்குப் பகுதியில் ரஷ்யப் படையினர் வேகமாக முன்னேறிக் கொண்டு இருந்தனர்.

மங்கோலிய தலைநகரைக் (உலன் பட்டூரை) கைப்பற்றுவதற்காக அவர்கள் வேகமாக நகர்ந்து கொண்டு இருந்தனர். அவர்களை எதிர்த்து ஜப்பானிய வீரர்கள் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

ஐரோப்பாவில் யுத்தம் முடிவுக்கு வந்து ஜேர்மனியின் அடல்ப் ஹிட்லரும் காதலி ஏவாவிரானும் காணாமற்போய் இருந்தனர். அவர்களை உயிருடனோ, பிணமாகவோ பிடிப்பதற்காகத் தலைநகர் பேர்ளின் மற்றும் கிழக்கு ஜேர்மனியையும் சோவியத்தின் செம்படை வீரர்கள் சல்லடைபோட்டுத் தேடிக் கொண்டு இருந்தனர். அவர்கள் இருவரும் இதுவரை எவரிடமும் சிக்கவில்லை.

இது இவ்வாறு இருக்க இத்தாலிய கரும் சட்டை இராணுவத்தின் சர்வாதிகாரி பெனிற்றோ முசோலினி ஏற்கனவே உயிருடன் பிடிக்கப்பட்டு, கட்டி இழுக்கப்பட்டு, காறித்துப்பப்பட்டு பெருத்த அவமானத்துக்குரிய கேவலமான மரணத்தைச் சந்தித்திருந்தான்.

நேச நாட்டுப் படைகளும், அச்சு நாட்டு படைகளும் (எஞ்சியவை) மிகவும் களைத்திருந்தன. பசியாறுவதற்கு பொருள் தட்டுப்பாடு மட்டுமன்றி குடிதண்ணீரும் பற்றாக்குறையாக இருந்தது.



"ஐரோப்பாவில் யுத்தம் முடிந்து விட்டது. நீங்கள் சரணடைந்து விடுங்கள்" என ஜப்பானிய தளபதிக்கும் சக்கரவர்த்திக்கும் கடிதம் (எச்சரிக்கை) ஒன்று அமெரிக்காவால் அனுப்பி வைக்கப்பட்டும் இருந்தது.

அதற்கான பதிலை ஜப்பானிய போர்க் கப்பல் மோஸ் கோட் மூலம் தமது மொழியில் அமெரிக்க படைத்துறைக்கு பரிசீலிக்கிறோம் என பதில் அனுப்பி இருந்ததாக பிற்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் அமெரிக்கா உலகம் நடுங்க வைத்த அணுகுண்டுத் தாக்குதலை நடத்த காரணம் என்ன என்பது வியப்பாக இருக்கிறது இன்றுவரை.

ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஜப்பானிய தலைநகரை இலக்கு வைத்து பறந்து வந்த அமெரிக்க போர் விமானம் வளி மண்டலக் காற்று கரணமாக திட்டமிட்ட நேரத்திலும் பார்க்க சில மணிநேரம் தாமதமானது.

காரணம் உடனடியாக தெரியாத நிலையில் ENALOGOE விமானம் காலை 9 மணியளவில் டோக்கியோவை வட்டமிட்டபடி இருந்தது. மழையும் மூட்டமும் மின்னலுமாக இருந்ததால் டோக்கியோ தப்பிக்கொண்டது.

மன்னர் ஹிரோ ஹிற்ரோவின் இல்லமும் டோக்கியோ விலேயே இருந்தது. யொக்கக எமா துறைமுகமும் தப்பிப் பிழைத்தது.

வழிகாட்டுதல் விமானங்களின் உதவிஇன்றி வந்த குண்டு வீச்சு விமானம் ஜப்பானை நித்திரை கிடையில் வைத்து 'சாத்து'வதையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

வானொலி தகவல் பரிமாற்றம் ஏதுமின்றி தாக்குதல் இலக்கு விமானியின் தற்துணிவுக்கேற்ப டோக்கியோவின் நேர் மேற்கு புறமாக இருந்த கைத் தொழில் நகரம் இலக்கு வைக்கப்பட்டது.

பாவம் ஹிரோஷிமா காலை 9.15 மணிக்கு சரியாக தாக்கப்பட்டது. அங் குள்ள நினைவுச் சின்னத்தில் உள்ள பெரிய மணிக்கூடு எரிந்த நிலையில் இந்த நேரத்தையே இன்றும் காட்டிக் கொண்டே இருக்கின்றது.

'எனலோகே' விமானம் அந்த நகரத்தைச் சுற்றி வட்டமடிக்கவோ, எச்சரிக்கவோ இல்லை. 'பவ்வியமாக' வந்து நகர மத்தியில் தன் அடிவயிற்றைத் திறந்தது.

**அடிவயிற்றில் இருந்து பிரசவமான 'லிற்றில் போய்'**

லிற்றில் போய் என்ற குட்டிப் பையன் உலகின் முதலாவது அணுகுண்டு வானவெளியில் பிரசவமானது. லட்சோ லட்சம் மரணங்களை இன்றும் இனி மேலும் பிரசவிக்க அது பிரசவிக்கப்பட்டது.

அடிவயிறு மெதுவாக திறந்தது உலகின் முதலாவது அணுகுண்டு தலை கீழாக தரையை நோக்கி விழுந்தது. வளி மண்டலத்தை உரசியதால் நிலத்தில் விழுமுன் ஆயிரம் அடி உயரத்தில் வெடித்தது.

கொடுமையிலும் கொடுமை. மனித இனம் அது வரை காணாத பேரழிவு. ஹிரோஷிமா வில்லத்தனமாக எரியூட்டப்பட்டது.

பல ஆயிரக் கணக்கான மின்காந்த ஓட்டங்கள், பல ஆயிரக் கணக்கான வோல்ரேச் வெப்பம், கரும்புகை, வெடித்த இடத்தில் இருந்து குடையாக நச்சுப் புகை விரிந்தெழுந்து நகரத்தை விழுங்கியது.

திருகோணமலை 'டொக்யாட்டிலும் குயீன் மேரிக்கப்பல் மீதும் கொழும்பிலும் ஜப்பானிய விமானங்கள் சாரதாரண குண்டுகளை வீசியபொழுது கொழும்பு கட்டடங்களினதும் இரும்புக் கேட்களும் கப்பல் திருத்தும் டொக்கியாட்டும் குயீன் மேரியும் உருகி ஓடியதென்றால் சின்னப் பையன் விழுந்த ஹிரோஷிமாவும் குண்டுப் பையன் (Fat Boy) விழுந்து வெடித்த நாகசாகியும் எப்படி இருந்திருக்கும்?

அறிந்தவர் நடுங்கும் படியாக அந்த இரு நகரங்களும் தரைமட்டமாகின, கருகிவிழுந்தன. அதிக வெப்பத்தால் சாம்பராகி கரைந்தன. குண்டு வெடித்த இடத்தில் தாழ் அமுக்கம் ஏற்பட்டதால் உயிரை கரைக்கும் வெப்பக் காற்றும் சேர்ந்து ஊழித் தாண்டவமாடி இருக்கும்.

கால் நடையாகவும் வாகனங்களிலும் பயணித்தவர்கள் வீதிகளோடு காணாமற் போயினர். பாடசாலைகள் மாணவரோடு கருகிப் போயின.

ஹிரோஷிமா ஓகஸ்ட் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கும் நாகசாகி ஓகஸ்ட் 9 ஆம் திகதியும் மிகவும் நெருக்கமான இடைவெளிகளில் காணாது போயின.

மணலும் மண்ணும் தரையும் உருகி கடலுக்குள் ஓடின. தரை கண்ணாடிப் பாளமாகியதால் இரு நகரங்களிலும் விவசாயம் இன்றுவரை சாத்தியபடவில்லை. கைத்தொழில்களும் அழிந்ததே உண்மை. உடனடியாக கருகிப் போனவர்களது எண்ணிக்கை இரண்டு தாக்குதலிலும் மொத்தமாக இரண்டு லட்சம் சனத்தொகை என எழுந்தமானமாக கணக்கிடப்பட்டது.





சரியான கணக்கெடுப்பு அரசின் கணிப்பில் இருந்து வேறுபட்டதாக கூடுதலாகவே இருந்தது. யுத்தமுனை கணிப்புகள் குறைத்தே மதிப்பிடப்படுவது வழமை. *





யாழ் பொலிஸ் நிலையத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு பொலிஸ் நிலையத்துக்கு கடந்த சனிக்கிழமை வருகை தந்த பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர பொலிஸ் மரியாதையை ஏற்றுக்கொண்ட போது...
(இ – 19)
படம். எம்.எல்.லாபிர்

# அறியாத உயிர்களும் அற்புத அறிவியலும்

## கொசுறு



pufferfish, puffers, balloonfish, blowfish, bubblefish, globefish, swellfish, toadfish, toadies, honey toads என்றெல்லாம் பலவகைப்பெயர்கள் உண்டு இந்த மீனுக்கு. உலகிலேயே தங்க வித்த வளைக்கு அடுத்தபடியாக மிக அதிக விஷத் தன்மை கொண்ட வெர்ட்டிபிரேட்சாக இந்த பஃபர் மீன் கருதப் படுகிறது.

120 வகையைக்கொண்ட இந்த பஃபர் மீன்கள் பெரும்பாலும் சிறியவகைதான் என்றாலும் இவற்றில் சில 100செ.மீ வரை வளரக்கூடியவை என்பதும் தெரிந்துகொள்ளவேண்டிய தகவல்தான்.





இது எதிரிகளிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காக எலாஸ்டிக் தன்மையுள்ள இதன் வயிற்றில் தண்ணீர் அல்லது காற்றை நிரப்பி பந்து போல மாறும் தன்மையுடையது. இதன் விஷம் இதை உண்ணும் சுறா போன்றவற்றுக்கு எந்தவித கெடுதலையும் ஏற்படுத்தாது என்றாலும் மனிதர்கள் இதை உண்டால் இறப்பு நிச்சயம் என்பது அறிவியல் தரும் செய்தி.

## வர்ணம் தீட்டுங்கள்...






## பூனைக்குட்டி



**மியாவ், மியாவ் பூனைக்குட்டி**
**வீட்டைச் சுற்றும் பூனைக்குட்டி**
**வாலை வாலை ஆட்டுது**
**நாலு காலால் நடக்குது**
**மியாவ், மியாவ்**
**மியாவ், மியாவ்**
**மியாவ் மியாவ் பூனைக்குட்டி**
**தோட்டம் சுற்றும் பூனைக்குட்டி**
**கண்ணை கண்ணை உருட்டுது**
**பின்னால் தான் பார்க்குது**
**மியாவ், மியாவ்**
**மியாவ், மியாவ்**


**- ரஷ்மி -**




## புள்ளிகளை இணையுங்கள்



## சிறுவர் உலகம்



# ஆமையும் வாத்தும்



அது ஓர் அழகிய ஏரி. அந்த ஏரியில் அழகிய ஆமை ஒன்று தனது இரண்டு வாத்து நண்பர்களுடன் வாழ்ந்து வந்தது. தினமும் அந்த இரு வாத்துகளை ஆமை சந்திப்பது வழக்கம்.

ஒருநாள் அந்த இரண்டு வாத்துகளும் வருத்தத்துடன் காணப்பட்டன. இதைக்கண்ட ஆமை, ஏன் இருவரும் வருத்தத்துடன் உள்ளீர்கள் என்று கேட்டது.

பல வருடங்களாக மழை பெய்யாத காரணத்தால் இந்த ஏறி வறண்டு வருகிறது. இன்னும் சில காலத்திற்கு பிறகு இங்கு முற்றிலும் நீர் வறண்டு விடும். எனவே நாங்கள் இருவரும் பக்கத்துக்கு ஊரில் உள்ள ஏரிக்குச் செல்ல இருக்கிறோம், என்று வாத்துகள் கூறின.

என்னை விட்டு செல்வதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது. நீர் குறைந்தால் உங்களுக்கு உணவு தான் குறையும், எனக்கோ உயிரே போய் விடும். என்மீது உங்களுக்கு அன்பு இருக்குமானால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள், என்றது ஆமை.

உனக்கு தான் இறக்கைகள் கிடையாதே! உன்னை அழைத்துப்போக எங்களால் எப்படி முடியும்? என்றது வாத்து.


அதற்கு ஆமை ஓர் உபாயம் செய்யலாம், ஒரு நீண்ட குச்சியை எடுத்து வாருங்கள். நான் நடுவில் என்னுடைய பற்களால் கொட்டியாய் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் இருபக்கமும் பிடித்து தூக்கிக் கொண்டு பறந்து செல்லுங்கள், என்றது ஆமை

நாங்கள் உயரப்பறக்கும்போது நீ வாயைத்திறந்தால் கீழே விழுந்து இறந்து விடுவாய் என்று வாத்துகள் கூறின.

அப்படியானால் பறக்கும்போது நான் வாய் போசாமல் இருக்கின்றேன் என்று ஆமை கூறியது. இரு வாத்துகளும் இருபக்கமும் குச்சியை பிடித்து பறக்க நடுவில் ஆமை வாயில் பற்றிக் கொண்டு பறந்தன. சிறிது தூரம் பறந்தவுடன் ஆமை சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது. இரு வாத்துகளும் ஆமையிடம் சிறிது நேரம் அமைதியாய் இரு. இல்லாவிடில் நீ கீழே விழுந்து விடுவாய், என்று கூறியது.

செல்லும் வழியில் வாத்துகள் ஆமையுடன் பறந்து செல்வதைப் பார்த்த மக்கள் வாத்துகள் எதையோ தூக்கிக்கொண்டு போகின்றன என கூச்சலிட்டனர். ஆமையின் கெட்ட நேரம் அந்த வார்த்தைகள் அதன் காதில் விழுந்தன. இந்த மக்கள் ஏன் இப்படி கூச்சலிடுகின்றனர் என வாய் திறந்து பேச அது பிடித்திருந்த பிடி விட்டுவிட கீழே விழத் தொடங்கியது. கீழே விழுந்த ஆமை உடல் சிதறி இறந்தது.

**கூட்டிக் கழிச்சுப் பார்க்கனும்... சரியான பாதையில் போகனும்! யார் யார் எந்த எந்தப் மரத்துக்குப் போகனும்னு தெரியுதா?**



# எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் கரு ஜயசூரிய இன்று வெளியிடுவார்?

கொழும்பு, ஓக. 07

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் கரு ஜயசூரிய இன்று வெளியிடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது நிலைப்பாட்டை சபாநாயகருக்குத் தெரியப்படுத்தவுள்ளது. நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பிக்கிறது. இன்றைய அமர்வில் சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

எதிரணியில் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக தாம் இருப்பதால் தமக்கே எதிர்க்கட்சிப் பதவி வழங்கப்பட வேண்டும் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தொடர்ச்சியாக கோரி வருகிறது. இது தொடர்பில் எழுத்து மூல கோரிக்கையை முன்வைத்



தால் ஆராய்ந்து பார்க்க முடியும் என சபாநாயகர் அறிவித்திருந்தார்.

இதற்கமைய ஒன்றிணைந்த எதிர்க் கட்சி எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்தது. இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாட்டை சபாநாயகர் கேட்டிருந்தார். இன்றைய தினம் ஐ.ம.சு.முவின் நிலைப்பாட்டை அறிவிப்பதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் மஹிந்த அமரவீர சபாநாயருக்குப் பதில் வழங்கினார். ஐ.ம.சு.முவின் பதில் வழங்கப்பட்டால் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் எதிர்க்கட்சித்தலைவர் பதவி பற்றிய அறிவிப்பை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது விடயத்தில் தமக்கு சாதகமான பதிலை சபாநாயகர் வழங்காவிட்டால் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையான நடவடிக்கையில் ஈடுபடப்போகிறோம் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தம்மை அங்கீகரிகாவிட்டால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர இருக்கிறோம் என்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா குறிப்பிட்டார். அதேநேரம், ஐ.ம.சு.மு எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய எதிர்காலத்தில் அவர்கள் பெரும் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது இவ்விதமிருக்க, சட் டத்துறை நிபுணர்கள் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தனியான கட்சி அங்கீகாரம் இல்லையெனச் சுட்டிக் காட்டியிருப்பதுடன், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வது பொருத்தமானதாக இருக்காது என்றும் தெரிவிக்கின்றனர். (கு)

## ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் உயிரிழப்பு!

வாதுவை பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில் இடம்பெற்ற விருந்து பசார நிகழ்வில் உணவு ஒவ்வாமையின் காரணமாக பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வாதுவை பகுதியிலுள்ள விருந்துபசாரநிகழ்வொன்றில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டதில் நால்வர் பாதிப்புக்குள்ளாகி பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

எனினும் சிகிச்சை பயனின்றி இருவர் கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்ததுடன் மற்றைய இருவருக்கும் தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில்மேலும்ஒருவர்நேற்று முன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்த நிலையில் தொடர்ந்துசிகிச்சைபெற்று வந்த நான்காவது நபரும் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கஸ்பாவ, திவுலபிட்டிய மற்றும் வாதுவ பகுதிகளைச் சேர்ந்த 36 மற்றும் 20 வயதுடைய இருவரும் கடந்தசனிக்கிழமைஇரவும், 31வயதுடைய நபரொருர் நேற்றுமுன்தினமும் உயிரிழந்ததுடன் நேற்றைய தினம் உயிரிழந்தவர் 28 வயதுடையவர் ஆவார்.

அத்துடன், உயிரிழந்த இவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக பாணந்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை என தெரிவிக்கும் பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர, 20பேரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டிருக்கிறது எனவும் தொடர்ந்து விசாரணைகள் நடை பெற்று வருகின்றனஎனவும்குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் போது ஹோட்டலில் பரிமாறப்பட்ட உணவு மற்றும் மதுபான வகைகள் தொடர்பில் மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரியவருவதோடு இந்தக் ஹோட்டலில் சி.சி.டி.வி கமராக்கள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின் கீழ் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 25 குளங்களின் புனரமைப்புப் பணி பூர்த்தியடையும் நிலையில்!

ஜனாதிபதி செயலகம் கடந்த ஆண்டு அமுலாக்கிய 'சிறிசர பிவிசும' என்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் இலங்கை இராணுவ வீரர்கள் திருகோணமலை மாவட்டத்தில் 24 குளங்களைப் புனரமைத்துள்ளனர்.

இந்த ஆண்டு மேலும் 25 குளங்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகவுள்ளன.

பிரதேசவாசிகளின் நலன்கருதி, கைவிடப்பட்ட நிலையில் உள்ள 9 குளங்கள் முன்னுரிமை அடிப்படை யில் தூர்நீக்கி அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

'சிறிசர பிவிசும' வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்தினதும் தேவைக்கு ஏற்ப பாடசாலைக் கட்டடங்களும், நெடுஞ்சாலைகளும், வணக்கஸ்தலங்களும், சனசமூக நிலையங்களும் புனரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'நாம் உற்பத்தி செய்வோம், நாம் உண்போம்' வேலைத்திட்டத்தில் 370 குளங்கள் புனரமைப்பு

கொழும்பு, ஓக. 07

விவசாய அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ள நாம் உற்பத்தி செய்வோம், நாம் உண்போம் என்ற துரித விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் ஆயிரம் குளங்கள், ஆயிரம் கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 370 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆயிரம் குளங்கள், ஆயிரம் கிராமங்கள் என்ற அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் மேலும் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஒரு குளத்தை அபிவிருத்தி செய்வதற்காக 50 லட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

## சிறிய வர்த்தக துறையை அபிவிருத்தி செய்வதற்காக 330 கடன் திட்டங்கள்!

இளைஞர் தொழில்வாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்கான பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி பிரிவு, இளைஞர்களுக்காக முன்னெடுத்துள்ள இலங்கை வங்கி கடன் திட்டத்தில் இதுவரை 47 இளைஞர் யுவதிகளுக்கு இது வரை 210 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக்கடனைப்பெற்ற இளைஞர்,யுவதிகள் ஆடைதொழில்துறை, கட்டட நிர்மாணம், தொழில்நுட்பம், புகைப்படத் துறை உள்ளிட்டவற்றில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய வர்த்தக துறையை அபிவிருத்தி செய்வதற்காக 330 கடன் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வடக்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணத்தை சேர்ந்த பெருமளவானோர் இந்தக் கடனை பெற முன்வந்துள்ளனர்.

## சீனியில் யூரியா கலந்த விவகாரம்; தண்டப்பணம் விதித்தது நீதிமன்று

கொழும்பு, ஓக 07

சீனிக் கொள்கலனில் யூரிய கலக்கப்பட்டிருந்த விவகாரம் தொடர்பில் வவுனியா சதொச விற்பனை நிலையத்துக்கு நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சந்தைச் சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்திலுள்ள சீனிக் கொள்கலனில் தவறுதலாக யூரியா கலந்த விடயம் தொடர்பில் வவுனியா நகர சுகாதார பரிசோதகர்களால் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சதொச நிறுவனத்துக்கு நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்த ஒருவர், தனது தேவைக்காக பையொன்றை எடுத்ததுடன் அதனுள் இருந்தது யூரியா என அறியாமல் சீனி என நினைத்துச் சீனிக் கொள்கலனில் கொட்டியுள்ளார்.

இதனை அறியாத ஊழியர்கள் அந்தச் சீனியை விற்பனை செய்துள்ளனர். அதனைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர் ஒருவர் அதனுள் இரசாயனம் கலந்திருப்பதாகச் சந்தேகித்து மீளவும் எடுத்துவந்து கொடுத்தபோதே யூரியா, சீனி மூடையினுள் கலக்கப்பட்டுள்ளமை ஊழியர்களுக்குத் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது.

வவுனியா நகர சுகாதாரப் பரிசோதகர்கள் சதொச வளாகத்தில் பரிசோதனை மேற்கொண்டதுடன் 135 கிலோ சீனியையும் தமது கட்டுப்பாட்டில் எடுத்து சென்றதுடன், வவுனியா நீதி மன்றில் வழக்கும் தொடர்ந்திருந்தனர். (ஐ)

## வவு. வடக்குப் பிரதேச செயலாளருக்கு எதிராக இதுவரை 46 முறைப்பாடுகள்

வவுனியா, ஓக 07

வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு எதிராக 46 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் காணி விடயம் மற்றும் வீட்டுத்திட்ட விடயங்கள் உள்ளடங்கலாகப் பல்வேறுபட்ட விடயங்களில் அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை மற்றும் இலஞ்சம் ஊழல் தொடர்பில் 46 முறைப்பாடுகள் என்னிடம் இதுவரை பொதுமக்களால் முன் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை எண்ணிடம் ஆதாரத்துடன் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவற்றையும் இணைத்து எதிர்வரும் வாரம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க ஏதுவாக இருக்கும்.

அத்துடன், இதுவரை எனக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் எதிர் வரும் வாரம் சமர்ப்பிப்பதற்கான பூர்வாங்க பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளேன் – என்றார். (ஐ)

## ரயில் மோதி மாணவி சாவு

கொழும்பு, ஓக. 07

அளுத்கமவிலிருந்து காலி நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு 18 வயதுடைய மாணவியொருவர் உயிரிழந்துள்ளார் என அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவமானது நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் அம்பலாங்கொடை ரயில் நிலையத்திலிருந்து ஒருகிலோமீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளது.

ரயிலுடன் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளானதுலாணி அமந்தா என்ற மாணவியை சிகிச்சைக்காக பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்த்தபோதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்தோனேசிய நில நடுக்கத்தில் 82 பேர் பலி!

ஜகார்த்தா, ஒக.07

இந்தோனேசியாவின் பாலி, லாம்போக் தீவுகளில் ஏற்பட்ட பயங்கரநிலநடுக்கம்காரணமாக 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

17 ஆயிரத்துக்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட ஆசிய நாடான இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். இந்த நிலையில், வெளிநாட்டு சுற்றுலாவாசிகளை பெரிதும் ஈர்க்கும் அந்தநாட்டின் பாலி மற்றும் லாம்போக் தீவுகளில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.



இதன் தாக்கம் கிழக்கு மற்றும்வடக்கு பாலி, கிழக்கு ஜாவா, தென்கிழக்கு மதுரா, தெற்கு கலிமண்டன், தெற்கு சுலவேசி ஆகிய இதர பகுதிகளில் கடுமையாக உணரப்பட்டது. இந்த நிலநடுக்கம் பல வினாடிகள் வரை நீடித்தது.


இதனால் கடலோர பகுதிகளில் கட்டடங்கள், வீடுகள் குலுங்கின. கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து நொறுங்கின. பல இடங்களில் கட்டடங்கள்இடிந்துவிழுந்தன. மரங்கள் முறிந்து விழுந்தன. மின்கம்பங்களும் சாய்ந்தன.

கடலுக்கு அடியில் 15 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் இந்தோனேசிய அரசு உடனடியாக சுனாமி எச்சரிக்கை விடுத்தது.

மக்கள்அனைவரும்உடனே மேடான பகுதிக்கு விரைந்து செல்லுங்கள். யாரும் அச்சம் கொள்ளவேண்டாம். நிலைமை இயல்பாகும்வரை அமைதியாக இருங்கள் என்று இந்தோனேசிய வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியது. எனினும் கடல் அலைகள் எதிர்பார்த்த அளவிற்கு எழாததால் சிலமணிநேரம் கழித்து சுனாமி எச்சரிக்கைவாபஸ்பெறப்பட்டது.

இந்நிலையில், சக்தி வாய்ந்த இந்த நிலநடுக்கத்திற்கு 82 பேர் பலியாகியுள்ளனர் என்றும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைத்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# மலையில் மோதியது விமானம்; சுவிற்சர்லாந்தில் 20 பேர் சாவு!



ஜெனீவா,ஒக.07

சுவிற்சர்லாந்தில்ஜூரிச்நகர்அருகே 20 பயணிகளுடன் சென்ற 2 ஆம் உலகப்போரின்போது தயாரிக்கப்பட்ட சிறிய ரக விமானம் ஆல்ப்ஸ் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

கடந்த 1939 ஆம் ஆண்டு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட ஜேயு52 எச்பி – ஹெழடி என்ற பழமையான விமானம் டிசினோ நகரில் இருந்து, டியு பென்டார்ப் ராணுவ விமானத் தளத்துக்கு கடந்த சனிக்கிழமை மாலை புறப்பட்டது. இதில் 11 ஆண்கள், 9 பெண்கள் பயணித்தனர்.

விமானம் 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது, திடீரென ஆல்ப்ஸ் மலையின் ஒரு பகுதியான பிஸ் செக்னாஸ் மலை மீதுமோதிவிபத்துக்குள்ளானது. இதில் சம்பவ இடத்திலேயேவிமானத்தில் பயணித்த 20 பேரும்பலியானார்கள்.

இது குறித்து செய்தித்தொடர்பாளர் அனிடா சென்டி கூறுகையில்–

இரண்டாம் உலகப் போரில்தயாரிக்கப்பட்ட பழைய ஜங்க்கர் ரக விமானத்தில் 20 பேர் பயணித்தனர். ஆனால் துரதிருஷ்டவசமாக செக்னாஸ் மலைமீது மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேரும் பலியானார்கள். மீட்புப்பணியில் 5 இற்கும் மேற்பட்ட ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

விமானத்தின் உடைந்த பாகங்கள் மலைப்பகுதியில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. விமானம்மோதிய வேகத்தில் வெடித்ததுதான் அனைவரும் பலியானதற்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இந்த விமானம் குறித்து அறிந்ததும் விமானத்தை தயாரித்த ஜேயு நிறுவனமும் வருத்தம் தெரிவித்துள்ளது. அந்த நிறுவனத்தின் சேவை அனைத்தும் நேற்று முன்தினம் ரத்து செய்யப்பட்டன.

# அமெ. பொருளாதார தடைக்கு ஒருநாள் முன்பாக 5 புதிய விமானங்களை வாங்கிய ஈரான்!

டெஹ்ரான், ஒக.07

அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதால் ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகள் அமலுக்கு வருவதற்கு ஒரு நாள் முன்னதாக 5 புதிய விமானங்களை ஈரான் வாங் கியுள்ளது.



அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து சமீபத்தில் விலகிக் கொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் அரசின்மீதுபல்வேறுபொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது. தனது நேசநாடுகளும் ஈரானை புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத் துறையின் சார்பில் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ஆனால், கடந்த 2017 ஆம் ஆண்டு பிரான்ஸ் மற்றும் இத்தாலியின் கூட்டு நிறுவனமான ஏடிஆர் உடன் 72 – 600 ரக பயணிகள் விமானங்களை வாங்க ஈரான் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன் படி ஏற்கனவே 8 விமானங்கள் ஈரானிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது அந்தநாட்டின் உள்நாட்டு விமான போக்கு வரத்துக்காக பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகள் நேற்று முதல்அமுலுக்குவந்தநிலையில், தடைக்கு ஒரு நாள் முன்னதாக ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஐரோப்பாவிடம் இருந்து 5 ஏடிஆர் 72 – 600 ரக விமானங்களை ஈரான் வாங்கியுள்ளது.

குறிப்பிட்ட 5 பயணிகள் விமானங்களும் நேற்று முன்தினம் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள மெஹ்ராபாத் விமான நிலையம் வந்தடைந்தன என ஈரான் வீதி மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் அப்பாஸ் அகோவ்ந்தி தெரிவித்துள்ளார்.

மேலும், ஐரோப்பிய நாடுகள், சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிடையே ஈரானுக்கு உள்ள நல்லுறவு, அமெரிக்காவின் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள கடினமான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என அப்பாஸ் தெரிவித்தார்.

# வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மீதான கொலை முயற்சியில் தொடர்புடைய 6 பேர் கைது!



கராகஸ், ஒக.07

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ பங்கேற்ற நிகழ்ச்சியில் நிகழ்ந்த குண்டு வெடிப்புடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்தநாட்டு அரசு தெரிவித்துள்ளது.

வெனிசுலா நாடு அதிக எண்ணெய் வளம் நிறைந்தது. இங்கு எண்ணெய் உற்பத்தியால் அதன் பொருளாதாரம் உயர்ந்து இருந்தது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடியில் சிக்கி வெனிசுலா தவித்து வருகிறது.

அந்தநாட்டின் ஜனாதிபதி பதவியில் இருந்த ஹியுகோ சாவேஸ் கடந்த 2013 ஆம் ஆண்டு மறைந்த பின்னர் அவரது அரசியல் வாரிசான நிகோலஸ் மதுரோ (வயது 55) ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்தநிலையில், அந்த நாட்டின் ராணுவத்தின் 81 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் நிகோலஸ் மதுரோ நேற்றுமுன்தினம் கலந்து கொண்டார். அவர், தொலைக்காட்சி மூலம் அந்நாட்டு மக்களிடம்நேரலையில்பேசிகொண்டிருந்தபொழுது, வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட சிறிய ரக ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) வெடிக்கச்செய்யப்பட்டன.

இதனை அடுத்து நிகோலஸ் உடனடியாக தனது பேச்சை நிறுத்தினார். இந்த தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக அவர் காயமின்றி உயிர் தப்பினார். எனினும், பாதுகாப்புப்படை வீரர்கள் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.


இந்தநிலையில், இந்த தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய 6 பேரை பொலிஸார் அதிரடியாக கைதுசெய்துள்ளனர்.

இதுகுறித்து வெனிசுலா உள்துறை அமைச்சர் நெஸ்டர் ரெவரோல் கூறுகையில்–

தாக்குதல்தாரிகள் 6 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைகளில் இருந்து முக்கிய தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும், கொலம்பியா மற்றும் அமெரிக்காவினர் தான் என்னை கொல்ல திட்டமிட்டு சதிசெய்து உள்ளனர் என இந்த தாக்குதல் குறித்து நிகோலஸ் மதுரோ குற்றம்சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலியல் பலாத்காரம், கொலை குற்றங்கள்; பாக். பிரஜைக்கு 13 மரண தண்டனைகள்!





பாகிஸ்தானில் 9 குழந்தைகளை பாலியல் பலாத்காரம்செய்து, அவர்களில் 4 குழந்தைகளை கொன்ற நபருக்கு 13 மரண தண்டனைகளுடன் ஏராளமான அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் கசூர் நகரை சேர்ந்த 7 வயது சிறுமியை பலாத்காரம் செய்து கொன்றமை தொடர்பாக இம்ரான் அலி என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தினர். இந்த வழக்கு லாகூர் நீதிமன்றில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இம்ரான் அலிக்கு மரண தண்டனையும், 7 ஆண்டு சிறை தண்டனையும், 40 லட்சம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தனர்.

தொடர்ந்து, அவரிடம் நடத்திய விசாரணையில் 8 சிறுமிகளை பலாத்காரம் செய்தது தெரிய வந்தது. அதில் 3 சிறுமிகளை பலாத்காரம் செய்து கொலை செய்துள்ளமை தெரியவந்தது.

இந்தநிலையில், 3 சிறுமிகளை கொன்ற வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், 3 சிறுமிகளை கொன்ற வழக்கில் இம்ரான் அலிக்கு 12 மரண தண்டனை விதித்து உத்தரவிட்டனர்.

மேலும், 60 லட்சம் ரூபா அபராதமும் விதித்தனர். அந்த தொகையில் இருந்து 30 லட்சம் ரூபாயை கொலை செய்யப்பட்ட 3 சிறுமிகளின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் உத்தரவிட்டனர்.

# சென்னை காவேரி மருத்துவமனையில் தொடர்ந்து கலைஞருக்கு தீவிர கண்காணிப்புடன் சிகிச்சை!



சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு கடந்த மாதம் இறுதியில் திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

தொடர்ந்து தீவிர சிகிச்சை நடந்து வந்த போதும் கருணாநிதியின் உடல்நலத்தில் கடும் பின்னடைவு ஏற்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இருந்து பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் காவேரி மருத்துவமனைக்கு முன்பு திரண்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

அடுத்த சில நாட்களில் கருணாநிதியின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டு சீரானது. அவரை 24 மணி நேரமும் டாக்டர்கள் குழுவினர் கண்காணித்து வருகிறார்கள். நேற்று 10 ஆவது நாளாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கருணாநிதி கழுத்தில் பொருத்தப்பட்டுள்ள டிரக்கியாஸ்டமி எனும் செயற்கை சுவாச கருவி வழியாக அவர் சுவாசித்து வருகிறார். சில சமயம் தானாகவே சுவாசித்து வருகிறார். அவரது உடல் நிலையில் பெரியளவில் மாற்றம் இல்லை.

லண்டனில் இருந்து வந்துள்ள முகமதுரேலா தெரிவிக்கும் ஆலோசனைப் படி டாக்டர்கள் குழு தற்போது கருணாநிதிக்கு சிகிச்சை அளிக்கிறது. ஆனால் கருணாநிதி உடலில் உள்ள இதர உறுப்புகளிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளதால் கல்லீரலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கு மெல்ல பலன் கிடைத்து வருகிறது.

கல்லீரல் செயல்பாட்டில் திருப்தி இல்லாததால் கருணாநிதிக்கு கடந்த 2 தினங்களாக மஞ்சள் காமாலை ஏற்பட்டு இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். அவரது ரத்தத்தில் உள்ள அணு அளவிலும் குறைவு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினைகளை தீர்க்க டாக்டர்கள் குழு தீவிர சிகிச்சைகளை அளித்து வருகிறது.

கருணாநிதியால் தனக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை அறிந்து கொள்ள முடிகிறது. தன்னை பார்க்க யார் – யார் வருகிறார்கள் என்பதையும் அவர் உணர்ந்து கொள்கிறார் என காவேரி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

என்றாலும் கருணாநிதி உடல் நிலையில் மிக வேகமான முன்னேற்றம் இல்லை என்று கூறப்படுகிறது. மெதுவாக அவரது உடல் நிலை சீராகி வருகிறது. எனவே இந்த வார இறுதியில் தான் அவர் வீடு திரும்புவார் என்று கூறப்படுகிறது.

## 200 இந்தியர்கள் நேபாளத்தில் தவிப்பு

நேபாளத்தில் தற்போது பலத்த மழை பெய்து வருவதால் வீதி, விமான போக்குவரத்து முடங்கியுள்ளது. இதன் காரணமாக இந்தியாவில் இருந்து கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரை சென்ற 200 பேர் நேபாளத்தின் சிமிகோட் பகுதியில் சிக்கியுள்ளனர்.

இதுகுறித்து நேபாளத்துக்கான இந்திய தூதரகம் ட்விட்டரில் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில்,

மோசமான வானிலையால் 200 இந்திய பக்தர்கள் சிமிகோட்டில் சிக்கியுள்ளனர். அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து கைலாச யாத்திரை சென்ற 1500 பேர் கடந்த ஜூலையில் இதே சிமிகோட் பகுதியில் சிக்கினர். அவர்களை இந்திய தூதரகம் பாதுகாப்பாக மீட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினத்தன்று புதுடில்லியில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதி

### உளவுத்துறை எச்சரிக்கை

புதுடில்லியில் வரும் சுதந்திர தினத்தன்று தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் 72 ஆவது சுதந்திர தினம் தலைநகர் டில்லி உட்பட நாடு முழுவதும் வரும் 15 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சுதந்திர தின விழாவை சீர்குலைக்கும் நோக்கத்துடன் சுமார் 600 தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் ஊடுருவ வைப்பதற்காக, பாகிஸ்தான் ராணுவம் திட்டமிட்டிருப்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு உளவுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த சூழ்நிலையில், மத்திய உளவு அமைப்புகள் முக்கிய தகவல் அடங்கிய அறிக்கையை பாதுகாப்புப் படையினரிடம் சமர்ப்பித்துள்ளன. அதில், ஜெய்ஷ் – இ – முகமது (ஜேஇஎம்) தீவிரவாத அமைப்பின் தலைவர் மவுலாணா மசூத் அசாரின் சகோதரர் ரவுப் அஸ்கரின் முன்னாள் பாதுகாவலர் முகமது இப்ராஹிம் சுதந்திர தினத்தன்று டில்லியில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கிறார் எனக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக, இப்ராஹிம் கடந்த மே மாதம் முதல் வாரத்திலேயே காஷ்மீருக்குள் நுழைந்துவிட்டதாகவும் இப்போது டில்லியில் பதுங்கி இருப்பதாகவும் உளவுத் துறை அறிக்கை கூறுகிறது. மேலும் ஜே இ எம் அமைப்பைச் சேர்ந்த முக்கிய நபரான உமரும் காஷ்மீர் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார் என்றும் தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்து வருகிறார் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மசூத் அசாரின் சகோதரரும் இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகளின் தளபதியுமான அஸ்கர் கண்காணித்து வருகிறார் எனக் கூறப்படுகிறது.

## அண்ணா பல்கலைக்கழக தேர்வு மறுமதிப்பீடு:

# ஊழலில் ஈடுபட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; தமிழக முதல்வரிடம் வலியுறுத்தியுள்ளார் ஸ்டாலின்



அண்ணா பல்கலைக்கழக தேர்வு மறுமதிப்பீட்டில் ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

அண்ணா பல்கலைக்கழகத்தில் பயிலும் பொறியியல் கல்லூரி மாணவர்களின் தேர்வுத்தாள் மறுமதிப்பீட்டில் பெரும் ஊழல் நடந்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி வேதனையளிக்கிறது. மதிப்பெண் மோசடி தொடர்பாக தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி ஜி.வி.உமா உள்ளிட்ட 3 பேரை தற்காலிக பணிநீக்கம் செய்திருப்பது மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவதில் புரையோடிப் போயிருக்கின்ற ஊழல் நோயை அடையாளம் காட்டியிருக்கிறது.

அதுமட்டுமின்றி 10 பேர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளதும், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நடைபெறும் விதவிதமான முறைகேடுகளும் அ.தி.மு.க. ஆட்சியில் உயர் கல்வித்துறை எப்படி சீரழிந்துவிட்டது என்பதை உணர்த்துகிறது.

கடந்த ஆண்டு 3 லட்சத்து 2 ஆயிரத்து 380 மாணவர்கள் தேர்வுத்தாள் மறுமதிப்பீட்டுக்காக விண்ணப்பித்து உள்ளனர் என்றும், அவர்களில் 73 ஆயிரத்து 733 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்றும் வெளிவந்துள்ள செய்திகள் பல்கலைக்கழகத்தின் நியாயமாக தேர்வு எழுதிய மாணவர்கள் வழக்கமாக விண்ணப்பிக்கும் மறு மதிப்பீட்டின் மீது மிகப்பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் குறிப்பாக, தேர்வில் தோல்வியடைந்தவர்கள் இந்த தேர்வுத்தாள் மறுமதிப்பீட்டின் மூலம் வெற்றி பெற்றுள்ளனர் என்பது அதைவிட கொடுமையான செய்தியாக இருக்கிறது.

தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பிறகு மறு மதிப்பீட்டுக்கு விண்ணப்பிப்பது அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உள்ள வழக்கமான நடைமுறை தான் என்றாலும், அந்த மறுமதிப்பீட்டு முறையில் ஒரு விடைத்தாளுக்கு ரூ.10 ஆயிரம் வரை லஞ்சம் பெற்றுக் கொண்டு அதிக மதிப்பெண்கள் போட்டிருப்பதும், ஒரு விடைத்தாளுக்கு 70 மதிப்பெண்கள் வரை மறு மதிப்பீட்டில் அளித்திருப்பதும் அதிர்ச்சியளிக்கிறது.

ஆராய்ச்சி படிப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவதிலும் முறைகேடு நடைபெற்றுள்ளது என்றும், விடைத்தாள் அச்சடிப்பதில் ரூ.60 கோடி ஊழல் என்றும் வரும் செய்திகள் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த தேர்வு முறையின் மீதான நம்பகத்தன்மைக்கு குந்தகம் விளைவித்திருக்கிறது.

ஆகவே, உலக அளவில் தரம் வாய்ந்த அண்ணா பல்கலைக்கழகத்தின் நன்மதிப்பை போற்றிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உயர் கல்வித் துறைக்கு இருக்கிறது. லஞ்ச ஒழிப்புத் துறை பதிவுசெய்துள்ள வழக்கின் விசாரணை அதிகாரியாக ஒரு மூத்த ஐ.பி.எஸ். அதிகாரியை நியமித்து, ஊழலில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அண்ணா பல்கலைக்கழகத்தின் மறு மதிப்பீட்டு முறையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் வகையில் சீர்திருத்தங்களை பரிந்துரை செய்வதற்கு துணை வேந்தர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து மாணவர்களின் எதிர்காலத்தையும், உயர்கல்வியின் தரத்தையும் பாதுகாத்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை தி.மு.க. சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்தியா முழுவதும் மோடிக்கு கடும் எதிர்ப்பு அலை வீசுகிறது



சிதம்பரம் கூறுகிறார்

நாடு முழுவதும் மோடிக்கு எதிர்ப்பு அலை வீசுவதால், மக்களவை தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெறும் என்று ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கலந்து கொண்டு தெரிவித்தவை வருமாறு: –

தற்போது மத்தியில் உள்ள பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜனதா அரசின் பல்வேறு திட்டங்களால் ஏழை – எளிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். நீட் தேர்வு, சேலம் 8 வழிச் சாலை, மீத்தேன் எரிவாயு திட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் தமிழகத்தில் பா.ஜனதா காலூன்ற முடியாது.

தமிழகம் உள்பட நாடு முழுவதும் மோடிக்கு கடும் எதிர்ப்பு அலை வீசி வருகிறது. இதனால் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரணிலுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்கவுக்கும் இடையிலேயே செய்து கொள்ளப்பட்டு உள்ளதென்றும் கூறினார்.

நேற்று முற்பகல், அநுராதபுரம் ஸ்ரீமஹாபோதிவிகாரைக்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி, அங்கு வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டுத் திரும்பும் போது, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அநுரகுமார திசாநாயக்க, பிரதமருக்குத் தேவையான விடயத்தைப் பற்றியே நாடாளுமன்றத்தில் கதைக்கிறார். இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பில் அரசு மீண்டும் அவதானம் செலுத்த வேண்டும். அதிலுள்ள சில உள்ளடக்கங்கள், இலங்கைக்குப் பாதகமானவையாகக் காணப்படுகின்றன– என்றார்.(ஐ)

## எரிபொருள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

கோப்பாயிலிருந்து கைதடி நோக்கி நகைக்கடை உரிமையாளர் தனது மகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது பின்னால் வந்த எரிபொருள் பவுசர் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

இதன்போது, 45 வயதுடைய ரஞ்சன் எனப்படும் நகைக்கடை உரிமையாளர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுள்ளார். 18 வயதுடைய அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-7)

## வன்முறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

அண்மைக் காலமாக மாவட்டத்தின் பல இடங்களிலும் வாள்வெட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. வாள்வெட்டுக் குழுக்களால் கிராம சேவகர் உட்படப் பலர் அச்சுறுத்தப்பட்டும் இருக்கின்றனர். மேலும் பல வீடுகள் மற்றும் உடைமைகள் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு மாவட்டத்தின் பல இடங்களிலும் அண்மைய நாட்களில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதனால் மக்களிடம் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே மக்களின் நிம்மதியான இயல்பு வாழ்க்கைக்கு வழிஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் வாள்வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அல்லது அந்தச் சம்பவங்களுடன் தொடர்படையவர்களைக் கைதுசெய்யப் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுகின்றனர். இதனாலேயே இந்தச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய – உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவேண்டும். அதனூடாக இவ்வாறான வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும் – எனச் சுட்டிக் காட்டப்பட்டது. (ஐ-7)

# புதிய அரசமைப்பினால் நாட்டுக்கு பேராபத்து என்கிறார் ஜி.எல்.பீரிஸ்

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்டுவரும் புதிய அரசமைப்பால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்படப்போவதாகவும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் தமக்கு இரகசியமான ஆவணம் ஒன்று கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## நீதிமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் தொடர்த்தும் வடக்கு மாகாண அமைச்சர் என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறு திப்படுத்தி உத்தரவிட்டு, அந்தப் பணியைத் தாம் ஆற்றுவதற்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் எனப் பணித்த பின்னரும் பல வாரங்களாகியும் அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த மறுப்பதன் மூலம் நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனம் செய்து புறம்தள்ளி அவமதித்து விட்டார் முதல்வர் விக்கினேஸ்வரன் எனத் தெரிவிக்கும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை கடந்த 31 ஆம் திகதி டெனிஸ்வரன் தாக்கல் செய்திருந்தார்.

டெனிஸ்வரனின் மூல வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான குமுதினி விக்கிரமநாயக்க, ஜனக் டீ சில்வா ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கமாக இத்தகைய நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் எதிராளிக்கு அழைப்பாணை அனுபப்படுவதே வழமை. ஆனால் இந்த வழக்கில் எதிராளி ஏற்கனவே மேற்படி சர்ச்சை தொடர்பான மூலவிவகாரத்தை ஒட்டிய வழக்கில் நீதிமன்றில் தமது சட்டத்தரணி மூலம் தோற்றி வருகின்றமையால் அவருக்கு அழைப்பு நோட்டீஸ் மட்டும் அனுப்பினால் போதாதா என்று நீதியரசர்கள் டெனிஸ்வரனின் சட்டத்தரணியான சுரேன் பெர்னாண்டோவிடம் கேட்டனர். ஆனால் அவருக்கு அழைப்பாணையே தாமதமின்றி அனுப்பப்பட வேண்டும் என்று சுரேன் பெர்னாண்டோ நீதிமன்றில் வாதிட்டார். இதனையடுத்து இந்த விடயத்தில் தமது தீர்ப்பை வியாழனன்று (நாளைமறுதினம்) தாம் அறிவிப்பர் என நீதியரசர்கள் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர். (உ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கு விசேட குழுக்களை அமைத் துள்ளதாகவும் கூறினார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசங்கள் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கமைய அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 பேரைக் கைதுசெய்திருக்கின்றோம். இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

மாவட்டத்தின் பல இடங்களிலும் கடந்த இரு வாரங்களில் ஐந்து சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகவே 22 பேரைக் கைது செய்திருக்கின்றோம். இவர்கள் அனைவரும் ஆவா குழுவுடன் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்களுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன–என்றார்.(ஐ-7)

## கருணாநிதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தி.மு.க தலைவர் கருணாநிதி, கடந்த மாதம் 28ஆம் திகதி சென்னையில் உள்ள காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். கருணாநிதிக்கு 10ஆவது நாளாக நேற்றுச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், அவருக்கு நேற்று உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. இது குறித்து காவேரி மருத்துவமனை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், கருணாநிதி உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும், வயோதிபம் காரணமாக முக்கிய உறுப்புகளைச் சீராக செயல்பட வைப்பது சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கருணாநிதிக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்த 24 மணி நேரத்தில் அவருக்கு கொடுக்கப்படும் சிகிச்சைக்கு அவர் உடல்நிலை எப்படி ஒத்துழைக்கிறது என்பதை வைத்தே அடுத்தகட்ட சிகிச்சை இருக்கும் – இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இயக்கச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து இலங்கை திரும்பியவர் எனக் கூறப்பட்டது. அத்துடன் சில்லாலையைச் சேர்ந்தவரும் தற்போது பருத்தித்துறையில் வசிப்பவருமான லூயிஸ் அன்ரனி (வயது -42) என்பவரும் உயிரிழந்தார் என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் கூறின. அவர் சாரதிக்கு அருகாமையில் இருந்து பயணித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை தும்பளையை சேர்ந்த குடும்பம் ஒன்று வெளிநாட்டிலிருந்து வந்த தமது மகளை ஹஏஸ் வாகனத்தில் அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

இதன்போது இயக்கச்சிக்கும் – பளைக்கும் இடைப்பட்ட பகுதியில் மின் கம்பங்களுடன் வீதியின் ஓரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் ஹைஏஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள், யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ்2 நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள குற்றச்செயல்களுக்குப் போதைப் பொருள் பாவனையே காரணம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் ஆவா குழுவினரின் பிறந்த நாள் கொண்டாட்டப் படங்களைக் கைப்பற்ற முடிந்த பொலிஸாருக்கு ஏன் அவர்களைக் கைது செய்ய முடியாது எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.(ஐ-7)

## புற்றுநோய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் 3 சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் தலா 6 வைத்தியர்கள் வீதம் 18 வைத்தியர்கள் இருக்கவேண்டும். ஆனால் 9 வைத்தியர்களே இருக்கிறார்கள். அவர்களிலும் 5 பேர் இப்போது இடமாற்றம் பெறவுள்ளனர். அதன் பின்னர் புற்றுநோய் வைத்தியசாலையில் 4 வைத்தியர்களே கடமையாற்றவுள்ளனர். இது மோசமான நிலையாகும்.

இந்தநிலையில் வருடாந்த இடமாற்றத்துக்கு அமைவாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் இருந்து தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் இடமாற்றம் பெற வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியன வைத்தியர்களை இடமாற்றியுள்ளன. ஆனால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து எமக்கு வரவேண்டிய வைத்தியர் இன்னும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அங்கிருந்து தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற வேண்டிய வைத்தியரைத் தடுப்பதே இதற்கு காரணமாகவுள்ளது.

இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் ஆகியோருக்குப் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளபோதும் இதுவரை நடவடிக்கை எவையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் அந்த விடயத்தைப் பணிப்பாளருடைய கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இதனடிப்படையில் மத்திய சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்துக்கு மாகாண சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் கடிதம் எழுதியுள்ளார்.

அதேபோன்று பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும் கடிதம் எழுதியுள்ளோம். இதற்கு எதிர்வரும் வெள்ளிகிழமைக்கு முன்னர் எமக்கு பதில் கிடைக்க வேண்டும். இல்லையேல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் அடையாள பணிபகிஸ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளோம் –என்றார். (ஐ-7)

## அராலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

'வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி, சங்கரத்தை, மாவடி உள்ளிட்ட இடங்களில் கடந்த இரண்டு வார காலமாக வீடுகள் மீது கல் எறிதல், இனந்தெரியாதோர் நடமாட்டம் தொடர்பில் அங்குள்ள மக்கள் நித்திரையின்றி அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்று சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

"அராலிக் கிராமத்தைச் சேர்ந்த சிலரே வாகனங்களில் கொண்டு இறக்கி விடப்படுகின்றனர். அவர்களால்தான் நள்ளிரவு வேளையில் குழப்பகரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான முறைப்பாடுகளே எமக்குக் கிடைத்துள்ளன. ஊடகங்களில் வெளிவருவது போல் குள்ள மனிதர்கள் நடமாட்டம் இருப்பதாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு ஏதும் கிடைக்கவில்லை" என வட்டுக்கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

"கடந்த இரண்டு வார காலமாக இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் காரணமாகக் கிராம மக்கள் நிம்மதியற்று வாழ்கின்றார்கள். இனந்தெரியாத நபர்கள் வீடுகள் மீது கற்களை எறிகின்றார்கள். அந்த நபர்களை துரத்திச் செல்லும்போது, வாகனங்களில் ஏறி தப்பிச் செல்கின்றார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொலைபேசி ஊடாகப் பொலிஸாருக்கு அறிவித்ததும் சம்பவ இடத்திற்கு 4 பொலிஸாரே வருகின்றார்கள். இவர்களால் எவ்வாறு ஓடிய நபர்களைத் துரத்திப் பிடிக்க முடியும்.

பொலிஸாரிடம் ஆளணி இல்லை. தற்போது பரீட்சைகள் நடைபெறும் காலம். மாணவர்கள் நிம்மதியாகப் படிக்க முடியாதுள்ளது. அந்த மக்களும் தமது கிராமத்தை காக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்கள். எனவே இச் சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் நடனேந்திரன் தெரிவித்தார்.

"கடந்த இரண்டுவார காலமாக அராலி, மூளாய் பகுதிகளில் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்று வருவது தொடர்பில் எனக்கு முறைப்பாடு கிடைத்தது. நானும் சம்பவம் நடைபெற்ற வீடுகளுக்கு சென்று விசாரித்தேன்.

இனந்தெரியாத நபர்கள் வருவதாகத் தெரிவிக்கின்றார்கள். ஆனால் குள்ள மனிதர்கள் நடமாடுவதாக எவரும் எனக்கு முறைப்பாடு தெரிவிக்கவில்லை. இனந்தெரியாத நபர்கள் தொடர்பில் ஆதாரங்கள், அடையாளங்கள் இருந்தால் எனக்கு தெரிவிக்குமாறு கூறியுள்ளேன்" என்று சங்கானை பிரதேச செயலாளர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அப்பகுதியில் மக்களை ஒன்றுகூட்டிக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுமாறு அதற்கு தான் வருகை தருவதாகவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அதற்கேற்ப நாளை புதன் கிழமை 3 மணிக்குக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வதாகப் பிரதேச செயலாளர் மற்றும் வலிகாமம் மேற்கு தவிசாளர் ஆகியோர் தெரிவித்தனர். (ஐ-7)

# வென்றது பரிஸ் சென் ஜெர்மைன்




நடப்பு பிரெஞ்சு லீக் 1 சம்பியன்கள் பரிஸ் சென் ஜெர்மைனுக்கும் கடந்த பருவகால பிரெஞ்சு லீக்1 தொடரின் புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடம் பிடித்த மொனாக்கோவுக்குமிடையிலான பிரெஞ்சு சுப்பர் கிண்ணப் போட்டியில் பரிஸ் சென் ஜெர்மைன் வென்றது.

சீனாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில், 4:0 என்ற கோல் கணக்கில் மொனாக்கோவை பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது. பரிஸ் சென் ஜெர்மைன் சார்பாக, அஞ்சல் டி மரியா இரண்டு கோல்களையும் கிறிஸ்டோபர் என்குங்கு, டிமோதி வெயா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர்.

# ஏ.சி மிலனிடம் தோற்றது பார்சிலோனா



சர்வதேச சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், நேற்றுக் காலை இடம்பெற்ற போட்டியில், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனிடம் 1:0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா தோற்றது. இப்போட்டியில், ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்ட்ரே சில்வா பெற்றிருந்தார்.

இதேவேளை, இந்தத் தொடரின் மற்றொரு போட்டியில், இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவன்டஸை 3:1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் வென்றிருந்தது. றியல் மட்ரிட் சார்பாக, மார்கோ அஸென்ஸியோ இரண்டு கோல்களையும் கரித் பேல் ஒரு கோலையும் பெற்றனர். ஜுவன்டஸின் கோல் ஓவ்ண் கோல் மூலமாகவே கிடைக்கப் பெற்றிருந்தது.



# இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டார் ஸ்டோக்ஸ்

இந்தியாவுடனான 2 ஆவது டெஸ்ட் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணி வீரர் பென் ஸ்டோக்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியா உடனான 2ஆவது டெஸ்ட் போட்டி விளையாடவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டது.

இந்தப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி லண்டனின் லோட்ஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டியின் போது துடுப்பாட்டத்தில் சோபிக்க தவறிய டேவிட் மலன் நீக்கப்பட்டார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு மதுபான விடுதி ஒன்றில் வாலிபரை தாக்கிய வழக்கு விசாரணையை பென்ஸ் டோக்ஸ் இந்த வாரம் எதிர்கொள்ள வேண்டியுள்ளமையால் அவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவர்களுக்கு பதிலாக புதுமுக வீரர் 20 வயதான ஆலி போப் மற்றும் கிறிஸ் வோக்ஸ் சேர்க்கப்பட்டுள்ளனர்.



# பந்து வீச்சு குறித்து மத்தியுஸ் ஏமாற்றம்

இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இழந்துள்ள நிலையில் அணித்தலைவர் மத்தியுஸ் பந்து வீச்சு குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ளார்.

எங்கள் அணி பந்துவீச்சை ஆரம்பித்த விதம் குறித்து நான் ஏமாற்றமடைந்துள்ளேன் இறுதி 10 ஓவர்களையும் கூட நாங்கள் திட்டமிட்டபடி வீசவில்லை என மத்தியுஸ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆடுகளத்தில் 360 என்பது அதிகமான எண்ணிக்கை,நாங்கள் எங்கள் திட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்தவில்லை எனவும் மத்தியுஸ் தெரிவித்துள்ளார்.

தனஞ்சய டி சில்வா லகிருகுமார விளையாடிய விதங்களே இந்த போட்டியில் கிடைத்த சாதக தன்மை எனவும் குறிப்பிட்டுள்ள மத்தியுஸ் தென்னாபிரிக்காவின் ரீசா ஹென்ரிக்ஸ் சிறப்பாக விளையாடினார் டுமினி இனிங்ஸை சிறப்பாக முடித்து வைத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தப் போட்டியில்(தனது முதல் போட்டியில்)சதமடித்த ஹென்ரிக்ஸ் தனது முதல் போட்டியில் விளையாடி அணிக்கு பங்களிப்பு செய்தமை குறித்து திருப்தி வெளியிட்டுள்ளார்.

நான் ரி 20 போட்டிகளில் விளையாடியுள்ளேன் ஆனால் ஒரு நாள் போட்டி என்பது வித்தியாசமானது என குறிப்பிட்டுள்ள அவர் தென்னாபிரிக்க அணியில் இடம்பெறுவது கடினமான விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்



# ஸ்மித்தை பின்தள்ளி முதலாமிடத்துக்கு முன்னேறினார் கோஹ்லி

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில், முதலாமிடத்திலிருந்த ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித்தை இரண்டாமிடத்துக்கு பின்தள்ளி, இரண்டாமிடத்திலிருந்த இந்திய அணியின் தலைவர் விராத் கோஹ்லி முதலாமிடத்தைப் பிடித்துள்ளார்.

எட்ஜ்பஸ்டனில், கடந்த புதன்கிழமை ஆரம்பித்து சனிக்கிழமை முடிவடைந்த இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் 200 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 934 புள்ளிகளைப் பெற்றே முதலாமிடத்துக்கு விராத் கோஹ்லி முன்னேறியுள்ளார்.

எவ்வாறெனினும், கோஹ்லியின் தனிப்பட்ட பெறுபேறுகளுக்கப்பால், ஏனைய இந்திய அணி வீரர்களின் மோசமான துடுப்பாட்டத்தாலும் சாம் குரானின் சகலதுறையாட்டத்தாலும் பென் ஸ்டோக்ஸின் பந்துவீச்சாலும் இந்த டெஸ்டில் இந்தியா தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த 934 புள்ளிகளே, டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் கோஹ்லி பெறும் அதிகூடிய புள்ளிகள் என்பதுடன், இந்திய வீரரொருவர் பெறும் அதிகூடிய புள்ளி என்பதோடு, ஆசிய வீரரொருவர் பெறும் இரண்டாவது அதிகூடிய புள்ளி ஆகும். இலங்கையணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார 938 புள்ளிகளைப் பெற்றமையே ஆசிய வீரரொருவர் பெற்ற அதிகூடிய புள்ளிகள் ஆகும்.

இந்நிலையில், கருத்துத் தெரிவித்த குமார் சங்கக்கார, விராத் கோஹ்லி விளையாடுவதைப் பார்க்கும்போது, அவர் தலைசிறந்த இந்திய துடுப்பாட்ட வீரராகலாம் என்பதுடன், அவரது தலைமுறையில் அவர் இலகுவாக சிறந்தவரெனவும் அவர் இன்னும் முதிர்ச்சியடைவார் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, 2011ஆம் ஆண்டு ஜுன் மாத த்தில், இந்திய அணியின் முன்னாள் தலைவர் சச்சின் டென்டுல்கர் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் இருந்ததன் பின்னர் இந்திய வீரரொருவர் முதலிடத்தில் இருப்பது இதுவே முதற்தடவையாகும்.

கோஹ்லியையும் டென்டுல்கரையும் தவிர, இந்தியாவின் முன்னாள் தலைவர்களான ராகுல் ட்ராவிட், சுனில் கவாஸ்கர், திலீப் வெங்கசர்க்கார் மற்றும் கௌதம் கம்பீர், விரேந்தர் ஷெவாக் ஆகியோரே டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் முதலிடம் பிடித்த ஏனைய இந்தியர்கள் ஆவர்.

இந்நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கான முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில், இரண்டாமிடத்திலிருந்த கோஹ்லி, முதலாமிடத்திலிருந்த ஸ்மித்தை பிரதியிட்டதைத் தவிர வேறு எந்த மாற்றமும் ஏற்படவில்லை. முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. விராத் கோஹ்லி, 2. ஸ்டீவ் ஸ்மித், 3. ஜோ றூட், 4. கேன் வில்லியம்சன், 5. டேவிட் வோணர், 6. செட்டேஸ்வர் புஜாரா, 7. திமுத் கருணாரத்ன, 8. தினேஷ் சந்திமால், 9. டீன் எல்கர், 10. ஏய்டன் மர்க்ரம்.

# வடக்கு- கிழக்கு வீடமைப்பில் விசேட கவனம் செலுத்துங்கள்

## சஜித்திடம் ரிஷாத் வேண்டுகோள்

மன்னார், ஓக 07

போரினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீடுகள் வழங்குவதில் தேசிய வீடமைப்பு அதிகார சபை விசேட கவனம் செலுத்தவேண்டுமென அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சினால் 2017 கம் உதாவ செமட்ட செவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மன்னார், நறுவிலிக் குளத்தில் அமைக்கப்பட்டுள்ள லூர்து நகர் வீடமைப்புத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– இலங்கையின் அரசியல் வரலாற்றில் மக்களால் இன்னும் நேசிக்கப்பட்டுவரும் உதாரண புருஷரான முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் புத்திரரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் முயற்சியினால், வீடுகள் அற்றவர்களை வீடுகள் உள்ளவர்களாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அந்தவகையில், வடக்கிலும் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இற்றைவரை 34 மாதிரி கிராமங்களை அவரது அமைச்சு அமைத்து வழங்கி உள்ளது.

வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அமைச்சர் என்ற வகையிலும் நான் அவரது நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன். நீண்ட காலமாக எமது மக்களுக்கு இருந்து வரும் இந்த வீடில்லாப் பிரச்சினை, அவரின் வருகையின் பின்னராவது தீரும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

அத்துடன், மன்னார் பள்ளிமுனையில் அவரது தந்தை பிரேமதாஸ அமைத்துக்கொடுத்த வீடுகள் தற்போது உடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஆகையால் இவற்றைத் தகர்த்துவிட்டு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் – என்றார்.

இந்த நிகழ்வில், பிரதியமைச்சர் காதர் மஸ்தான், குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# பெல்ஜியம் செல்ல முயன்ற யாழ்.இளைஞர் கைதானார்

கொழும்பு,ஓக.07

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, பெல்ஜியத்துக்குச் செல்ல முயன்ற, இலங்கைப் பிரஜையொருவர் கட்டுநாயக்கா விமான நிலையக் குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்ட அந்நபர், மேலதிக விசாரணைகளுக்காக, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர், இலங்கையிலிருந்து, சிங்கப்பூருக்குக் கடந்த 2ஆம் திகதி புறப்பட்டுச் சென்றுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்று அதிகாலை நாடு திரும்பிய அவர், பெல்ஜியம் நோக்கி பயணிப்பதற்கான கடவுச்சீட்டைக் கையளித்துள்ளார். அதனைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அந்தக் கடவுச்சீட்டு மலேசியா கடவுச்சீட்டென்றும் அது போலியானது எனவும் குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இதனையடுத்தே, அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில், தான் பயணித்த விமானத்தில் வைத்தே மேற்படி கடவுச்சீட்டு தன்னிடம் வழங்கப்பட்டது என்றும், அதனைப் பயன்படுத்தியே பெல்ஜியத்துக்குப் பயணிக்க விருந்ததார் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

# அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு கொடுப்பனவு அதிகரிக்கப்படா

## ஐ.தே.கவும் கூறுகின்றது

கொழும்பு,ஓக.07

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்புக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்காது. அரசும் இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டு எதிரணியினர் தமது அங்கீகாரத்தை தக்க வைத்துக் கொள்ளுவதற்காகவே அரசுக்கு எதிரான இதுபோன்ற விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அனுமதி வழங்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை – என்றார். (ஐ)

# இலங்கைக்கு புறப்பட்ட ஈழத் தமிழர் நடுவானில் விமானத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஓக 07

டென்மார்க்கில் இருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்ட நபர் விமானம் நடுவானில் பயணித்துக் கொண்டிருக்கும் நேரம் திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி எமிரேட்ஸ் குச் சொந்தமான விமானத்தில் தனது தாயகத்தை நோக்கிப் புறப்பட்ட பரமலிங்கம் பாலசந்திரன் (வயது–58) தமிழரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் 3 பிள்ளைகளின் தந்தை எனவும் தெரியவந்துள்ளது.

விமானம் புறப்பட்டு ஒன்றரை மணித்தியாலத்தின் பின்னரே இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

தொடர்ந்தும் விமானத்தில் பணியாளர்களால் அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டுள்ள போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

டுபாய் நோக்கிப் பயணித்த எமிரேட்ஸ் விமானத்தின் அதிகாரிகள் அவர் உயிரிழந்த விடயத்தை அறிந்து கிரீஸின் தலைநகரான எதேன்ஸில் அவரது உடலை ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இருப்பினும் இறந்த நபரின் உடல் அவரது சொந்த இடமான டென்மார்க்குக்குக் கொண்டு வரப்படவில்லை.

அவரின் உடலைச் சொந்த இடத்திற்கு கொண்டு வருவதற்காக அந்த நாட்டு அதிகாரிகள் சட்டநடைமுறைகளை எடுத்துள்ளனர்.

பெரும்கனவுடன்தாயகம்நோக்கிப் பயணித்தவரின் மரணமானது அவரது மனைவி மற்றும் பிள்ளைகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. (ஐ)

# பொலிஸ் பதிவுப் படிவம் நிரப்பவேண்டியதில்லை

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு,ஓக.07

கொழும்பிலுள்ள சில பகுதிகளில், பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பி வழங்கவேண்டிய அவசியமில்லை என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரில், வெள்ளத்தை, கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி, கடற்கரை பொலிஸ் உட்பட பல பொலிஸ் நிலையங்களின் மூலம், குடியிருப்பாளர்களைப் பதிவு செய்யும் நடைமுறை மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும், இது தொடர்பில் தமது விவரங்களை எழுத்து மூலம், பொலிஸார் தரும் படிவங்களில் எழுதித் தருவதிலுள்ள அசௌகரியங்களை பற்றியும், கொழும்பு வாழ் மக்கள், தன்னிடம் முறைப்பாடு மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில், தான், நேற்றுப் பொலிஸ்மா அதிபரிடம் கலந்துரையாடினார் என்றும், இந்த நடைமுறையை உடனடியாக நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கூறினார் எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதை ஏற்றுக்கொண்டு, இந்த நடைமுறையைஉடன்நிறுத்துவதாகப்பொலிஸ்மா அதிபர் தன்னிடம் உறுதியளித்தார் என்றும், எனவே இந்தப் பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பி பொலிஸ் தரப்பினருக்கு வழங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)



இலங்கைக்கு வந்துள்ள சுவிற்சர்லாந்து நாட்டின் சமஷ்டி சபை உறுப்பினர், சட்டம் மற்றும் பொலிஸ் அலுவல்கள் தொடர்பான திணைக்களத்தின் பிரதானி சிமோனெடா சொமாருகா அம்மையார் நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினார். (ஐ)

# முன்னாள் விமானி துப்பாக்கியுடன் கைது

கொழும்பு,ஓக.07

துப்பாக்கி ஒன்றுடன் டுபாய் நோக்கிப் பயணிக்க முற்பட்ட இலங்கை விமானப் படை முன்னாள் விமானி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜகிரிய பகுதியில் வசிக்கும் இந்தச் சந்தேகநபர், தற்போது கென்யா நாட்டில் உள்நாட்டு விமான சேவையொன்றில் பணியாற்றிவருகிறார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.